# தேவனுடைய சிட்சையை சாந்தமாய் ஏற்றுக் கொள்ளுதல்

## (2 சாமுவேல் 15-20)

*எபிரெயர் 12ம் அத்தியாயமானது, நமக்கு வசதிப்படாத/ ஆறுதலாயிராத/சங்கடம் தருகின்ற ஒரு பாடக் கருத்தைப் பற்றிப் பேசுகின்றது: கர்த்தருடைய சிட்சை.*

*எபிரெயருக்கு எழுதப்பட்ட நிருபம் யாருக்கு அனுப்பப்பட்டதோ, அவர்கள் உற்சாகம் இழந்து போனவர்களாக, [சபையை விட்டு] வெளியேறத் தயாரானவர்களாக இருந்தார்கள். இந்த நிருபத்தின் எழுத்தாளர், அவர்கள் மறந்து போயிருந்த சிலவற்றை அவர்களுக்கு நினைவூட்டினார்:*

> *உங்களை மகன்கள் என்று அழைத்திருக்கும் உற்சாகப்படுத்துதலை நீங்கள் மறந்து விட்டீர்கள் ...*
>
> *"என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்துகொள்ளப்படும்போது சோர்ந்துபோகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள்."*
>
> *... தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார், தகப்பன் சிட்சியாத புத்திரன் உண்டோ? ... அன்றியும் நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும்போது அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்கவேண்டுமல்லவா? அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள்; இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும்பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார். எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும் (எபி. 12:5-11).*

*நமது வழியில் பிரச்சனைகள் ஏன் வருகிறதென்று நாம் எப்போதுமே புரிந்துகொள்ள முடியாமல் போகலாம், ஆனால் எபிரெயர் 12, கடினமான காலங்கள் வரும்போது, நாம் அவற்றை சாந்தமாய் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று போதிக்கின்றது. நாம் "ஆவிகளின் பிதாவுக்கு அடங்கி நடக்க" (வ. 9) கற்றுக் கொள்வது மிகவும் அவசியமாக உள்ளது. நாம் நமது இருதயத்தை அவரது இருதயத்துடன் இசையச் செய்ய வேண்டும். அதை நாம் செய்தால், முடிவில் நாம் அதிகம் தேவனைப் போன்றவர்களாவோம். முடிவில் நாம், நம் மனதில், வேறு எவ்வகையிலும் அறிய இயலாத சமாதானத்தைக் கொண்டிருப்போம். "நீதியாகிய சமாதான பலன்" (வ. 11) என்பது நமது வாழ்வில் வளர்ந்து கனியும்.*

*"கர்த்தருடைய சிட்சையை சாந்தமாய் ஏற்றுக் கொள்ளுதல்" என்பது தாவீதின் வாழ்வு பற்றிய இந்தப் பாடத்தின் மையக் கருத்தாக உள்ளது. இந்தக் காட்சியின்போது திரை தூக்கப்படுகையில், தாவீதின் மகன் அப்சலோம் எப்ரோனில் அரசராக அறிவிக்கப்பட்டார், படையில் பெரும்பகுதியினர் அவர் பக்கம் சென்றார்கள், அவர் தலைநகரான எருசலேமை நோக்கி வடக்குமுகமாக அணிவகுத்து வந்து கொண்டிருந்தார் என்ற செய்தி தாவீதை வந்தெட்டியிருந்தது. அந்தச் செய்தியைத் தாவீது கேட்டபோது, அவர் அரண்மனையிலிருந்த யாவரிடத்திலும். "எழுந்து ஓடிப்போவோம், இல்லாவிட்டால் நாம் அப்சலோமுக்குத் தப்ப இடமில்லை" (2 சாமு. 15:14) என்று கூறினார்.*

*விரைவிலேயே தாவீதின் வீட்டார் நகரை விட்டு வெளியே சென்றார்கள். அவர்கள் யோர்தான் நதியைத் தங்களுக்கும் அப்சலோமின் படைகளுக்கும் மத்தியில் இருக்கச் செய்யலாம் என்று நம்பிக்கையுடன் கிழக்கு நோக்கிப் பயணமானார்கள். அவர்கள் ஒலிவ மலையின் மீது ஏறியபோது, தாவீது தமக்குப் பின் [எருசலேம்] நகரம் அழுவதைக் கேட்க முடிந்தது.*

> *தாவீது தன் முகத்தை மூடி, வெறுங்காலால் நடந்து அழுது கொண்டு, ஒலிவமலையின்மேல் ஏறிப்போனான்; அவனோடிருந்த சகல ஜனங்களும் முகத்தை மூடி அழுதுகொண்டு ஏறினார்கள் (15:30).*

*தாவீது ஏன் அழுதார் என்று நாம் அவரிடம் கேட்டோமென்றால், அவரது பதில் பின்வருவது போன்று இருந்திருக்கும்: "நான் ஒரு தந்தையாயிருக்கத் தவறியதாலும் இப்பொழுது என் சொந்த மகனே என் உயிரை வாங்கத் தேடுவதாலும் நான் அழுகின்றேன். நான் என்னை மட்டுமின்றி, நான் நேசித்த எல்லாரையும் அபாயத்துக்கு உட்படுத்தி விட்டதால் அழுகின்றேன். நான் தேவனுடைய நகரமும் அதன் குடிகள் யாவரும் இடர்ப்பாட்டில் இருப்பதால் அழுகின்றேன். நான் அறுபதுக்கும் மேற்பட்ட வயது உடையவனாக இருந்தும், நான் சாதிக்க முயன்றதெல்லாம் ஒன்றுமில்லை என்பதுபோல் காணப்படுவதால் அழுகின்றேன்." அவர் சற்றுத் தாமதித்துப் பின்பு, "கர்த்தருடைய சிட்சை மிகவும் கடினமாக இருப்பதால் நான் அழுகின்றேன்" என்பதையும் சேர்த்துக் கூறுவார்.*

*தாவீது காயம்பட்ட தாக்கப்பட்ட மனிதராயிருந்தார், அவர் தமது*

*பாவங்கள் தமது தலையின்மீது கொண்டுவந்த புயல்களினால் தாக்கப்பட்ட வராயிருந்தார். அவர் உள்ளாக இரத்தம் சிந்திக் கொண்டு இருந்தார். அவர் இன்னமும் தமது குற்ற உணர்வுடன் போராடிக் கொண்டிருந்தார். அவர் தம் சொந்த வீட்டாரிடத்தில் உள்ள பிரச்சனைகளையே கையாள இயலாத வராக இருந்தார். துன்பம் வரும்போது, அவர் செயல்படுவதைக் காட்டிலும் பதில்செயல் செய்வது அதிகமாயிருந்தது. இந்த தாவீதுதான், "எழுந்து ஓடிப்போவோம்" என்று கூறினார், இவர் ஒலிவ மலையின் சரிவில் ஏறியபோது ராஜா என்பதைக் காட்டிலும் பிச்சைக்காரர் என்பது போன்றே அதிகம் காணப்பட்டார்.*

*இது, தாவீது இத்துடன் தீர்ந்தார் என்று அர்த்தப்படுத்துவதில்லை - அல்லது தேவன் அவருடன் இல்லாது போனார் என்றும் அர்த்தப்படுத்து வதில்லை. தாவீது கீழே விழத் தள்ளப்பட்டார், ஆனால் அவர் புறக்கணிக்கப்படாதவராக இருந்தார். அவர் காயப்பட்டும் தாக்கப்பட்டும் இருந்தார், ஆனால் அவர் முடிந்துபோய் விடவில்லை. நான் தொடர்ந்து வாசிக்கையில் தாவீது தமது வாழ்வின் இந்தச் சிறுமையான வேளையிலும் தமக்குள் கொண்டிருந்த எண்ணப்போக்கு என் மனதில் பதியக் கூடியதாக உள்ளது. இந்தக் காலகட்டத்தை மறுகண்ணோட்டமிடுவதால், கர்த்தருடைய சிட்சையை சாந்தமாய் ஏற்றுக் கொள்ளுதல் என்பது எதை அர்த்தப்படுத்துகின்றது என்பதைப் பற்றிச் சில விஷயங்களைக் கற்றுக் கொண்டேன் என்று நினைக்கின்றேன்.*

## *அவர் பிறரைக் குறித்து அக்கறையுடன் இருந்தார் (15:18-22)*

*தாவீதின் வீட்டார் எருசலேமை விட்டுச் செல்லுகையில், தாவீது கடைசி வீட்டில் நின்றுகொண்டு தமது வீட்டார் ஒவ்வொருவரும் தம்மைக் கடந்து செல்லுவதைக் கவனித்தார். கடைசியாக அவருடைய மனிதர்களுடன் கித்தியனாகிய ஈத்தாய் வந்தார்.[1] "கித்தியன்" என்பது, ஈத்தாய் என்பவர் காத் நகரில் இருந்து வந்தவர் என்று அர்த்தப்படுத்து கின்றது. அவர் தாவீதின் படையுடன் இணைந்து கொள்வதற்காகப் போர்வீரர்களின் ஒரு குழுவை சமீபத்தில் கொண்டு வந்திருந்த பெலிஸ்தத் தளபதியாயிருந்தார். தாவீது அவரிடத்தில் நின்று, பின்வருமாறு கூறினார்:*

> *நீ எங்களுடனே கூட வருவானேன்? நீ திரும்பிப்போய், ராஜாவுடனே கூட இரு; நீ அந்நிய தேசத்தான்; நீ உன் இடத்திற்குத்[2] திரும்பிப் போகலாம். நீ நேற்றுத்தானே வந்தாய்; இன்று நான் உன்னை எங்களோடே நடந்து வரும்படிக்கு அழைத்துகொண்டு போகலாமா? நான் போகக் கூடிய இடத்திற்குப் போகிறேன்; நீ உன் சகோதரரையும் அழைத்துக் கொண்டு திரும்பிப் போ; கிருபையும் உண்மையும் உன்னோடே கூட இருப்பதாக (15:19, 20).*

*தாவீது அப்சலோமை "ராஜா" என்று குறிப்பிட்டார். தாவீது அறிந்தவரை அவரது ஆளுகை முடிவு பெற்றுவிட்டது. எதிர்காலம் எதை வைத்துள்ளது*

என்று அவர் அறியாதிருந்தார். அந்த நிலைமைகளின் கீழ், எனது சிந்தனைகள் அநேகமாக என் மீது கவனம் கொண்டவையாகவே இருக்கும்: "எனக்கு என்ன ஆகப் போகின்றது?" ஈத்தாயைத் தாவீது பார்த்தபோது, ஈத்தாய், தாம், தமது மனிதர்கள், மற்றும் தமது குடும்பங்கள் இருந்த இக்கட்டான நிலைமையைப் பற்றிச் சிந்தித்தார். "நீ என்னுடன் வர வேண்டும் என்று அவசியமில்லை. நகரத்திற்குள் திரும்பிப் போ. நான் புரிந்து கொள்வேன்."

தாவீதின் அக்கறை உணர்வானது, வேதாகமத்தில் உள்ள மாபெரும் உறுதிப்பாட்டு எடுத்துரைப்புகளில் ஒன்றை அழைக்கின்றது: "ஆனாலும் ஈத்தாய் ராஜாவுக்குப் பிரதியுத்தரமாக: 'ராஜாவாகிய என் ஆண்டவன் எங்கேயிருப்பாரோ, அங்கே உமது அடியானும், செத்தாலும் பிழைத்தாலும், இருப்பான்' என்று கர்த்தருடைய ஜீவனையும் என் ஆண்டவனுடைய ஜீவனையும் கொண்டு சொல்லுகின்றேன் என்றான்" (15:21).

நம் வாழ்வில் பிரச்சனைகள் எழுகின்றபோது, ஒரு இருண்ட மூலையில் ஒழுங்கற்று அமர்ந்து கொண்டு, காயங்களை நக்கிக் கொண்டு, "எனக்கு ஐயோ" என்று பாடிக் கொண்டிருத்தல் என்பதே நமது இயல்பான பதில் செயலாக உள்ளது. நாம், தேவனுடைய சிட்சையை சாந்தமாய் ஏற்றுக் கொள்ளக் கற்றிருந்தால், நாம் நம் மீது கொண்டுள்ள கவனத்தை விட்டு வெளியேறியவர்களாய் பிறரின் தேவைகள் குறித்துக் கவனம் செலுத்துவோம் - சிறப்பாக நமக்கு நேரிட்டவைகளினால் பாதிக்கப்பட்ட பிறரின் தேவைகள் குறித்துக் கவனம் செலுத்துவோம்.

## அவர் தமது எதிர்காலத்தைத் தேவனுடைய கரங்களில் வைத்தார் (15:23-29)

கித்தியனான ஈத்தாய் கிதரோன் ஆற்றைக் கடந்து போன வேளையில், சாதோக்கும் அபியத்தாரும் வந்தார்கள். இவர்கள் கிபியோனில் ஆசரிப்புக் கூடாரத்தையும் எருசலேமில் பெட்டியையும் கவனித்துக் கொள்ளும்படி தாவீதால் நியமிக்கப்பட்ட இரண்டு ஆசாரியர்களாய் இருந்தார்கள். அவர்களுடன் உடன்படிக்கையின் பெட்டியைச் சுமந்து வந்த லேவியர்களும் இருந்தார்கள்.[3] அவர்கள் தங்கள் ராஜாவுடன் செல்லத் தயாராக இருந்தார்கள், ஆனால் தாவீது பின்வருமாறு கூறினார்:

> தேவனுடைய பெட்டியை நகரத்திற்குத் திரும்பக் கொண்டுபோ; கர்த்தருடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால், நான் அதையும் அவர் வாசஸ்தலத்தையும் பார்க்கிறதற்கு, என்னைத் திரும்ப வரப்பண்ணுவார். அவர் "உன்மேல் எனக்குப் பிரியமில்லை" என்பாராகில், இதோ, இங்கே இருக்கிறேன்; அவர் தம்முடைய பார்வைக்கு நலமானபடி எனக்குச் செய்வாராக (15:25, 26).

பெட்டியானது ஒரு நல்லதிர்ஷ்டக் குறி என்ற வகையில் அலைக்கழிக்கப் பட்டுக் கொண்டிருக்கக் கூடாது என்பதைத் தாவீது புரிந்து கொண்டிருந்தார். அது, இஸ்ரவேலின் உண்மையான ராஜா யெகோவாதாம் என்பதை

மக்களுக்கு நினைவூட்டுவதற்காக எருசலேமிலேயே நிலைத்திருக்க வேண்டும். தாவீதின் கூற்று வெளிப்படுத்திய எண்ணப்போக்குதான் மிகவும் தாக்கம் செலுத்தும் அம்சமாக உள்ளது. தாவீதின் வார்த்தைகள், கர்த்தருடைய சிட்சையை சாந்தமாய் ஏற்றுக் கொள்வது என்பது, எதை அர்த்தப்படுத்துகின்றது என்று விளக்கப்படுத்துகின்றன. அவற்றை மீண்டும் வாசியுங்கள்:

> கர்த்தருடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால், நான் அதையும் அவர் வாசஸ்தலத்தையும் பார்க்கிறதற்கு, என்னைத் திரும்ப வரப்பண்ணுவார். அவர் ''உன்மேல் எனக்குப் பிரியமில்லை'' என்பாராகில், இதோ, இங்கே இருக்கின்றேன்; அவர் தம்முடைய பார்வைக்கு நலமானபடி எனக்குச் செய்வாராக (15:25, 26).

தாவீது ஒரு இளைஞனாயிருந்த வேளையில் அவர் ஒரு இராட்சதனைக் கொன்றதை நாம் திகைப்புடன் கவனித்தோம். அவர் தேடப்பட்டவரா யிருந்த போது, தமது விரோதியான சவுலைத் துன்புறத்த மறுத்து விட்டதைக் கண்டு நாம் வியப்புற்று நின்றோம். ஒரு போர்வீரர் என்ற வகையிலும் ஒரு நாட்டுப்பற்றாளர் என்ற வகையிலும் அவரது வெற்றி களைக் கண்டு நாம் மலைத்து நின்றோம். கர்த்தர் மீது அவர் கொண்டிருந்த விசுவாசத்தினாலேயே இந்த வெற்றிகள் யாவும் அவருக்குச் சாத்திய மாயிற்று. ஆயினும், இப்பொழுது, தாவீது அடிக்கப்பட்டு அவரது இருதயம் உடைந்துபோன நிலையில், நாம் அவருக்குள் இதற்குமுன் கண்டிராத வகையிலான சிலவற்றைக் காண்கின்றோம். நாம் பக்குவத்தைக் காண்கின் றோம். அவர், "கர்த்தரே, எனக்கு வெற்றியைத்தாரும்" என்று வேண்டிக் கொண்டிருக்கவில்லை. அவர், "கர்த்தரே நான் என்ன செய்ய வேண்டும் என்று எனக்குக் காண்பித்தருளும்" என்றுகூட ஜெபிக்கவில்லை. மாறாக, அவர் கர்த்தருக்கு முன்பாக வீழ்ந்து, ''உம் சித்தத்தின்படி என்னை நடத்தியருளும். நான் அரியணைக்கு மீண்டும் திரும்ப வேண்டும் என்பது உமது சித்தமானால், அது நல்லது. அது உமக்குச் சித்தமில்லையென்றால், அதுவும் கூட நல்லதே. எது மிகச் சிறந்தது என்று நீர் அறிவீர்; நான் அதை அறிவதில்லை. நீர் எது மிகச் சிறந்தது என்று நினைக்கின்றீரோ, அதன்படியே என்னை நடத்தும்.''

சாதோக்கும் அபியத்தாரும், தாவீது தங்களை எருசலேமுக்குத் திரும்பும்படி கூறியபோது ஏமாற்றம் அடைந்தவர்களாகக் காணப் பட்டிருக்க வேண்டும். அவர்கள் தாவீதுடன் பயணம் செய்தலை விட அதிகமான வகையில், அவருக்குப் பயனுடையவர்களாய் இருக்க முடியும் என்று தாவீது அவர்களிடம் கூறினார். அவர்கள் அவரது கண்களாகவும் காதுகளாகவும் இருக்க முடியும். "அப்சலோம் [எருசலேம் நகருக்கு] வந்து சேருகையில்," "என்ன நடக்கின்றது என்பதைக் கண்டறியுங்கள்.[4] பின்பு உங்கள் மகன்கள் மூலம் எனக்கு வார்த்தை அனுப்புங்கள். நான் உங்களிடத்தில் இருந்து வரும் தகவலைக் கேள்விப்படும் வரையிலும் யோர்தானின்[5] இக்கரையில், நாங்கள் காத்திருப்போம்'' என்று அரசர் கூறினார். இதில் திருப்தி அடைந்த சாதோக்கும் அபியத்தாரும் பெட்டியை

எடுத்துக் கொண்டு நகருக்குத் திரும்பிச் சென்றார்கள்.

## அவர் தமது உணர்வுகளை வெளிப்படுத்த அஞ்சாதிருந்தார் (15:30-37)

சாதோக்கும் அபியத்தாரும் சென்ற பின்பு, தாவீது ஒலிவ மலைச் சரிவுகளில் ஏறத்தொடங்கினார். அதன் பின்புதான், தாவீது "தன் முகத்தை மூடி, வெறுங்காலால் நடந்து அழுதுகொண்டு, ஒலிவமலையின் மேல் ஏறிப் போனான்;" - அவரோடிருந்த சகல ஜனங்களும் கூட அழுதார்கள் (15:30).

நாம் சிட்சிக்கப்படுகின்றபோது, அது ஒரு கவலையான வேளையாக உள்ளது: அதை மறுக்கத் தேவையில்லை. நமக்கு நாமே மிக அதிகமாக செல்லம் காட்டுதல் என்பது சாத்தியமாக உள்ளது (அதைப் பற்றி அதிகமான வற்றை நாம் பின்பு காண்போம்); ஆனால் கண்ணீர்கள் பெருகுகின்றன, அதைப் பற்றி நாம் வெட்கம் அடையத் தேவையில்லை. நாம் துன்புறுகின்றோம் என்பதை மறைத்தலானது, குணமாகும் செயல்முறைக்குத் தடங்கலை ஏற்படுத்தக் கூடும், அதே வேளையில் நமது வேதனையை நேர்மையாக ஒப்புக்கொள்ளுதல் என்பது நமக்கு உதவக்கூடும். தாவீது தமது இருதயத்தில் இருந்த பெரும் வேதனையை வெளிப்படுத்த அஞ்சாதிருந்தார்.

அப்சலோமுடன் இருந்த சூழ்ச்சியாளர்களின் மத்தியில் அகித்தோப்பேலும் இருந்தார் என்ற செய்தி வந்தபோது தாவீதின் மீது பெருந்துக்கம் குவிந்தது. அகித்தோப்பேல், தாவீதின் நம்பிக்கைக்குரிய ஆலோசகர்களில் ஒருவராக இருந்திருந்தார்; அவர் இப்பொழுது தாவீதைக் காட்டிக் கொடுத்துள்ளார். ஆயினும் தாவீது தன்னிரக்கத்தில் நேரத்தை வீணாக்காமல், தமது இருதயத்தைத் தேவனிடம் ஊற்றினார்: "கர்த்தாவே, அகித்தோப்பேலின் ஆலோசனையைப் பயித்தியமாக்கி விடுவீராக" (15:31).

தாவீதின் வேண்டுகோளானது ஏறக்குறைய உடனடியாக நிறைவேற்றப்படத் தொடங்கிற்று. தாவீது மலையின் உச்சிக்குச்[6] சென்று சேர்ந்த வேளையில், அற்கியனான ஊசாய்[7] அவரைச் சந்திக்க வந்தார். இந்த ஊசாய் இருமுறை "தாவீதின் சிநேகிதன்" என்று அழைக்கப்படுகின்றார் (15:37; 16:16).[8] அவர் தாவீதின் அரண்மனையில் நம்பிக்கைக்குரிய உறுப்பினராகவும் தாவீதின் ஆலோசகர்களில் ஒருவராகவும் இருந்தார். சாதோக்கு, அபியத்தார் ஆகியோரைப் போலவே, ஊசாயும் தாவீதுடன் போகத் தயாராக இருந்தார், ஆனால் மீண்டும் ஒருமுறை தாவீது தமது தலையை அசைத்தார். "தாவீது அவனைப் பார்த்து: நீ என்னோடே கூட நடந்து வந்தால் எனக்குப் பாரமாயிருப்பாய்" (15:33) என்று கூறினார். உணவூட்ட இன்னொரு வாய் என்பது தாவீதுக்குத் தேவைப்பட்ட கடைசி விஷயமாக இருந்தது.

அவருடைய வார்த்தையை மென்மையாக்குவதற்காகத் தாவீது விரைவில், அகித்தோப்பேலின் ஆலோசனையைப் பயித்தியமாக்கும்படி தாம் தேவனிடத்தில் ஜெபித்த ஜெபத்திற்கு ஊசாயே பதிலாக இருந்தார் என்பதைச் சுட்டிக் காண்பித்தார்:

*நீ நகரத்திற்குத் திரும்பிப் போய், அப்சலோமை நோக்கி: "ராஜாவே, உம்முடைய ஊழியக்காரனாயிருப்பேன்; முன் நான் உம்முடைய தகப்பனுக்கு ஊழியக்காரனாயிருந்தேன்; இப்போது நான் உமக்கு ஊழியக்காரன் என்றாயேயாகில், எனக்காக அகித்தோப்பேலின் ஆலோசனையை அபத்தமாக்குவாய்" (15:34).*[9]

*ஊசாய் அறியும் எந்த ஒரு விஷயத்தையும் அவர், சாதோக்கு மற்றும் அபியத்தார் என்ற ஆசாரியர்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று அவர் [தாவீது], ஊசாய்க்குக் கூறினார். அவர்கள் அவருக்கு அதை அனுப்பு வார்கள்.*

## அவருக்கு உதவி செய்ய நண்பர்களைக் கொண்டிருந்தார் (15:21, 24, 32-34; 17:27-29)

இந்த வரலாற்றைத் தொடர்ந்து காண்பதற்கு முன்னால், ஒரு உண்மையை வலியுறுத்துவதற்காக நான் சற்றே தாமதிக்க விரும்புகின்றேன். தாவீதின் நண்பர்களில் பலர் அவருக்கு உதவுவதற்காக அவருடன் சேர்ந்து [பேரணிபோல்] வந்தார்கள் என்று நாம் ஏற்கனவே கண்டோம். நமது பாடத்தை நாம் தொடருகையில், மற்றவர்களையும் நாம் காண்போம். நாம் கர்த்தரால் சிட்சிக்கப்படுகையில் நம்மைப் பெலப்படுத்தி, நமக்கு ஆதரவு தருகின்ற நண்பர்களைக் கொண்டிருத்தல் என்பது நமக்கு உதவியளிப்பதாக இருக்கும் (பிர. 4:9, 10, 12).

தாவீதின் இந்த நண்பர்களில் பெரும்பாலானவர்கள் பற்றி, அவர்கள் தாவீதுக்கு உதவினார்கள் என்ற உண்மையைத் தவிர, நாம் கொஞ்சமே அறிகின்றோம். இவர்கள் எல்லாரைப் பற்றியும் பின்வரும் விஷயத்தை நாம் அறிகின்றோம்: அவர்கள், அப்சலோம் எருசலேம் நோக்கித் தமது அணிவகுப்பைத் தொடங்கிய பின்பு தாவீதுக்கு நண்பர்களாகவில்லை. மாறாக, இந்த வேளைக்கு நீண்ட காலம் முன்னதாகவே தாவீது அவர்களுக்கு நட்புறவுக்கரத்தை நீட்டியிருந்தார் - இவ்வாறு, தாவீது தண்ணீர்கள் மீது போட்டிருந்த இரக்கம் என்ற ஆகாரமானது அவரிடத்திற்குத் திரும்பி வந்தது (பிர. 11:1).

கர்த்தருடைய சிட்சைக்குத் தயார் செய்து கொள்ளும் காலம் என்பது சிட்சை தொடங்கும் பொழுது அல்ல ஆனால் அதற்கு முன்னதாக - நீண்ட காலம் முன்னதாக உள்ளது. வானிலை அறிக்கையாளர், "சென்னைக்குத் தென்கிழக்கில் 200 மைல் தூரத்தில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உருவாகி, அது சென்னையை நோக்கி மணிக்கு 90 மைல் வேகத்தில் வந்து கொண்டுள்ளது"[10] என்று அறிவிப்பு வரும்போது, ஒளிந்து கொள்ள ஒரு இடத்தைத் தேடுவது மிகவும் தாமதமாகி விடும். வாழ்வின் புயல்கள் நமது தலைகளின் மீது வெடிக்கும்போது, நட்புறவின் குடையைப் பெற்றுக் கொள்வதென்பது மிகவும் தாமதமாகி விடும்.

தேவனுடைய எதிர்கால சிட்சைக்கு ஆயத்தமாயிருப்பதற்காக, கர்த்தருடன் நம் உறவுமுறைகளையும், பிறருடன் நம் உறவுமுறைகளையும்

*குறித்துச் செயல்படுவதன் மூலம் நாம் இப்பொழுதே தயாராக வேண்டும். "சிநேகிதருள்ளவன் சிநேகம் பாராட்ட வேண்டும்" (நீதி. 18:24;* KJV*).*

## *அவர் பரிசோதிக்கப்பட்டார் (16:1-14)*

*ஊசாய் தாவீதை விட்டுச் சென்ற பின்பு, அரசர், ஒலிவ மலையின் கிழக்குச் சரிவில் இறங்கும் தமது பயணத்தைத் தொடர்ந்தார். அங்கே அவர் சீபா என்ற இன்னொரு தனிநபரைச் சந்தித்தார். இவரிடம் தாவீது, மேவிபோசேத்தின் உடமைகளைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பை ஒப்படைத்திருந்தார். தாவீதுக்கு சீபா, பொதிசுமக்கும் இரு கழுதைகளின் மீது ஏற்றப்பட்டிருந்த அப்பங்கள், வற்றலான திராட்சப் பழக்குலைகள், மற்ற உலர்ந்த பழங்கள், ஒரு துருத்தி திராட்ச இரசம் ஆகியவற்றைக் கொண்டு வந்திருந்தார். ராஜா செல்லுமுன் இதை அவரிடம் கொண்டு வருவதற்கு, ராஜா புறப்பட்டதை அறிந்தவுடன் சீபா, விரைவாகச் செயல்படத் தொடங்கியிருந்திருக்க வேண்டும். இவர் ராஜாவுக்கு ஒரு வரவேற்புக் காட்சியாகக் காணப்பட்டார்.*

*தாவீது சீபாவை, மேவிபோசேத்து எங்கிருக்கிறார் என்று தெரியுமா என்று கேட்டார்.*[11] *சீபா, "எருசலேமில் இருக்கிறான்; இன்று இஸ்ரவேல் வீட்டார் என் தகப்பனுடைய ராஜ்யத்தை என் வசமாய்த் திரும்பப் பண்ணுவார்கள் என்றான்" (16:3) என்று பதில் அளிக்கையில் தந்திரமாய்ப் புன்னகை புரிவதை நான் காண்கின்றேன். இவர் [சீபா] தாம் விரும்பியதைப் பெறுவதற்காக எதை வேண்டுமானாலும் கூறக்கூடிய, சுயமையம் கொண்டு வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய நபராக இருந்தார் என்று நான் நம்புகின்றதால், அவரை ஒரு தந்திரமான புன்னகையுடன் சித்தரிக்கின்றேன். மக்களின் இருதயங்களைக் கவர்ந்திருந்த, படைபலத்தால் ஆதரிக்கப்பட்டிருந்த, பலம் வாய்ந்த, அழகு மிகுந்த அப்சலோமிடம் இருந்து ராஜ்யத்தை போரிட்டுப் பெற்றுக் கொள்ளலாம் என்று ஒரு ஊனமுற்ற மனிதர் [மேவிபோசேத்] நினைக்கக் கூடுவது எப்படி? பின்வரும் கூற்றுக்கள் இரண்டில்ஒன்று உண்மையாயிருக்க வேண்டும்: மேவிபோசேத் முற்றிலும் மதியற்றவராக, முழுமையும் நன்றியற்றவராக இருக்க வேண்டும் அல்லது சீபா ஒரு* bald-faced *பொய்யராக இருக்க வேண்டும். பிந்திய விஷயம் தான் உண்மை என்பது என் யூகமாக உள்ளது.*

*ஆயினும் உறுதியாய் தோன்றிய சீபாவின் பெருந்தன்மையில் மூழ்கடிக்கப்பட்ட தாவீது மேவிபோசேத்தின் உடமை யாவற்றையும் இவருக்கு உரித்தாக்கினார்.*

*இந்த சூழ்நிலையானது, சிட்சையின் தொடர்பாக நாம் அறியத் தேவையான பல சத்தியங்களை விவரிக்கின்றது: நாம் புண்படும் போது, நாம் தாக்கப்படக் கூடியவர்களாகின்றோம் என்பது ஒரு சத்தியமாகும். சில மனிதர்கள் தங்களால் முடியுமென்றால், நமது தாக்கப்படக்கூடிய தன்மையைத் தங்களுக்கு அனுகூலமாக - சீபா, தாவீதின் சூழ்நிலையைப் பயன்படுத்தியது போலவே - பயன்படுத்திக் கொள்வார்கள் என்பது இன்னொரு சத்தியமாக உள்ளது. பெரும்பருந்தொன்று சாலை விபத்திற்கு*

ஈர்க்கப்படுவது போலவே (விளக்கை நோக்கி வரும் விட்டில் பூச்சி போலவே) குறிப்பிட்ட வகையிலான மனிதர், காயம் பட்ட மனிதர்களிடத்தில் ஈர்க்கப்படுகின்றார். இப்படிப்பட்ட நபர் அவரது/அவளது சுயநலமான நோக்கங்களுக்காக பரிதாபமும் அக்கறையும் கொண்டவர்கள் போல் பாசாங்காக நடிப்பார்கள்.[12] இது நாம், மக்களின் எண்ணங்களில் குறை காண்பவர்களாக வேண்டும் என்று அர்த்தப்படுத்துவதில்லை. இது நாம் எளிதில் ஏமாறுவதைத் தவிர்க்க வேண்டும் என்றுதான் அர்த்தப் படுத்துகின்றது.

இது, சிட்சையைப் பற்றி நாம் இதுவரைக்கும் கலந்துரையாடியிராத ஒரு நோக்கத்தை அறிமுகப்படுத்துகின்றது. கர்த்தருடைய சிட்சை நம்மைப் பரிசோதிக்கிறது என்ற கருத்துணர்வொன்று உண்டு - நாம் இந்த பரிசோதனையைச் சந்திக்கும்போது, அது நம்மை இன்னும் சிறந்தவர் களாக்குகின்றது (எபி. 12:10; யாக். 1:2-4). நாத்தானின் தீர்க்கதரிசனங்கள் உண்மையாகுகையில், தாவீது பல்வேறு படி நிலைகளில் பரிசோதிக்கப் பட்டார். அவரது விசுவாசம் சோதிக்கப்பட்டது. அவரது இருதயம் சோதிக்கப்பட்டது. அவரது நீடிய பொறுமை சோதிக்கப்பட்டது. அவர் அப்சலோமிடம் இருந்து ஓடுகையில், அந்தப் பரிசோதனைகள் தொடர்ந்தன. மிகக் கடினமான பரிசோதனைகளில் ஒன்று விரைவில் வரக் கூடியதாயிருந்தது.

தாவீது ஒலிவமலையின் கிழக்குச் சரிவில் இறங்கத் தொடர்ந்த வேளையில், அவர் பகூரிம் என்ற கிராமத்தை வந்தடைந்தார். சவுலின் உறவினரான சீமேயி என்ற பெயர்கொண்ட ஒரு மனிதர் அவருக்கு எதிர்ப்பட்டு, தாவீதின் மீது கற்களை எறிந்து அவரைத் தூஷித்தார்:

> இரத்தப்பிரியனே, பேலியாளின் மனுஷனே, தொலைந்துபோ, தொலைந்துபோ. சவுலின் ஸ்தலத்தில் ராஜாவான உன்மேல் கர்த்தர் சவுல் வீட்டாரின் இரத்தப்பழியைத் திரும்பப்பண்ணினார்.[13] கர்த்தர் ராஜ்யபாரத்தை உன் குமாரனாகிய அப்சலோமின் கையில் ஒப்புக் கொடுத்தார்; இப்போதும் இதோ, உன் அக்கிரமத்தில் அகப்பட்டாய்; நீ இரத்தப்பிரியனான மனுஷன் (16:7, 8).

நீங்கள் தாக்கப்படக்கூடிய நிலையில் இருக்கும்போது, ஒரு குறிப்பிட்ட வகையிலான நபர், உங்களை சீபாவைப் போல - தமது சுயநலநோக்கத் திற்காக அனுகூலப்படுத்திக் கொள்வார் என்று நான் குறிப்பிட்டிருந்தேன். இன்னொரு வகையிலான நபரும் உங்களின் தாக்கப்படக்கூடிய நிலையை அனுகூலப்படுத்திக் கொள்வார், ஆனால் இவர் ஒரு மாறுபட்ட வழியில் அதைச் செய்வார். நீங்கள் கீழே விழுந்திருக்கின்றபோது - சீமேயி தாவீதுக்குச் செய்தது போல் - இவ்வகையிலானவர்கள் உங்களை உதைப்பார்கள். நீங்கள் துன்புற்றுக் கொண்டிருக்கும்போது மக்கள் உங்கள் துன்பங்களைக் குணப்படுத்துவதற்குப் பதில் உங்களை வேதனைப் படுத்துவது என்பது [சகித்துக் கொள்ள] மிகவும் கடினமானதாக உள்ளது! இது - சீமேயி செய்தது போல் - அநீதியான முறையில் தாக்குதல் தொடுக்கப் பட்டால் மிகவும் கடினமானதாக உள்ளது.

*தாவீதுடனிருந்த அபிசாய், ராஜாவிடத்தில், "... நான் போய் அவன் தலையை வாங்கிப் போடட்டுமே" என்று கூறினார் (16:9)! நானாக இருந்தால் அநேகமாக, "அது ஒரு மிகச் சிறந்த கருத்தாக உள்ளது! இதோ அவன் எறிந்த ஒரு கல்லினால் எனது தலையில் ஊமைக்காயம் பட்டுள்ளது, எனது காதுகளில் அவனது கூக்குரல் ரீங்காரமிடுகின்றது. [அவனைப்] போட்டுத் தாக்குங்கள்" என்று கூறியிருப்பேன். மக்கள் நமது காயங்களையும் புண்களையும் குத்திக் கிளறும்போது, நாம் அவர்களைத் திருப்பித் தாக்க வேண்டும் என்று சோதிக்கப்படுகின்றோம். ஆயினும் தாவீது தமது தலையை [எதிர்மறையாக] அசைத்து பின்வருமாறு கூறினார்.[14]*

> *... அவன் என்னைத் தூஷிக்கட்டும்; "தாவீதைத் தூஷிக்க வேண்டும்" என்று கர்த்தர் அவனுக்குச் சொன்னார்; ஆகையால் "ஏன் இப்படிச் செய்கிறாய் என்று கேட்கத்தக்கவன் யார்?" ... இதோ என் கர்ப்பப் பிறப்பான என் குமாரனே என் பிராணனை வாங்கத் தேடும்போது, இந்தப் பென்யமீனன் எத்தனை அதிகமாய்ச் செய்வான், அவன் தூஷிக்கட்டும்; அப்படிச் செய்யக் கர்த்தர் அவனுக்குக் கட்டளையிட்டிருக்கிறார். ஒருவேளை கர்த்தர் என் சிறுமையைப் பார்த்து, இந்நாளில் அவன் நிந்தித்த நிந்தனைக்குப் பதிலாக எனக்கு நன்மையைச் சரிக்கட்டுவார் என்றான் (16:10-12).*

*தாவீது கர்த்தருடைய சிட்சையை எவ்வாறு சாந்தமாய் ஏற்றுக் கொண்டார் என்பதை நாம் மீண்டும் காண்கின்றோம். அவர் சீமேயின் செயல்களின் மீது கர்த்தருடைய கரம் இருக்கலாம் என்று புரிந்து உணர்ந்தார். அவர் தேவனுடைய எல்லா நோக்கங்களும் திட்டங்களும் தமக்குத் தெரிந்ததுபோல் நடிக்கவில்லை. அவர், "ஒருவேளை கர்த்தர் அவனுக்கு இவ்வாறு கூறியிருந்தால்" என்றும், "ஒருவேளை கர்த்தர் என் சிறுமையைப் பார்த்து" என்றும் கூறினார். மிக முக்கியமாக, தாவீது சீமேயின் திட்டுதல்களுக்குத் தம்மை சாந்தமாய் ஒப்புவித்தார். இப்படிப் பட்ட வசைகள், தமது பாவத்தின் இன்னொரு விளைவாக இருந்தது என்று சாத்தியக் கூற்றை அவர் கண்டார்.*

*கர்த்தர் நம்மைச் சிட்சிக்கின்றபோது, நாம் நமது தாக்கப்படக் கூடிய நிலைகுறித்து எச்சரிக்கை உடையவர்களாயிருந்து, திருப்பித் தாக்கும்படி சோதிக்கப்படுதலைத் தவிர்க்க வேண்டும். நம்மைப் பரிசோதித்தல் என்பது நம் பிரச்சனைகளுக்கான நோக்கங்களில் ஒன்றாக உள்ளது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்; நாம் தேவனுடைய உதவியுடன் இவ்வித சோதனைகளினூடே உயிர் வாழ முடியும்; மற்றும் நாம் இந்த சோதனைகளை வெற்றிகரமாய்ச் சந்தித்தால், நாம் மேன்மையான மக்களாயிருப்போம். ஆகையால், நாம் நம்மை அமைதியாகக் காத்துக் கொண்டு, தாவீதின் வாழ்வில் தேவன் செயல்பட்டது போல, நம் வாழ்விலும் தேவன் செயல்பட அனுமதிப்போம்.*

## அவருக்குத் தேவன் உதவினார் (16:15-17:23)

16:15ல் காட்சி எருசலேமுக்குப் பின்னோக்கி மாற்றப்படுகின்றது. எப்ரோனிலிருந்து படைகள் புடைசூழ மற்றும் அப்சலோமைப் பின்பற்றிய கும்பல் சூழ்ந்த நிலையில் அவர் எருசலேமுக்கு பிரவேசிக்கையில் மாபெரும் உணர்வெழுச்சி கிளர்ந்து எழுந்தது.[15]

அப்சலோம் நெருங்கி வருகையில் அற்கியனான ஊசாய், "ராஜாவே வாழ்க! ராஜாவே வாழ்க!" என்றார் (16:16). தாவீதின் நண்பர்களில் ஒருவராயிருந்த ஊசாயிடம் தாவீது எருசலேமுக்குத் திரும்பிச் செல்லும்படி கூறியிருந்தார். ஊசாயின் வார்த்தைகள் குழப்பமூட்டுபவைகளாயிருந்தன (அவை அநேகமாக தாவீது இன்னும் ராஜாவாயிருந்தார் என்று குறிப்பிட்டிருக்கலாம்). அப்சலோம் புகழ்ச்சியில் மயங்கினார், ஆனாலும் அவர் சந்தேகம் கொண்டார். ஊசாய் பின்வரும் அதிக குழப்பமூட்டும் வார்த்தைகளினால் அவரது சந்தேகத்தைக் குறைத்தார்: "கர்த்தரும் இந்த ஜனங்களும் இஸ்ரவேல் மனுஷர் அனைவரும் தெரிந்து கொள்ளுகிற வரையே நான் சேர்ந்து அவரோடே இருப்பேன்" (16:18). அப்சலோம் கர்த்தரால் தெரிந்து கொள்ளப்படாதவராக இருந்தபடியால் இந்த வார்த்தைகள் அவரைக் குறிப்பிட்டிருக்க முடியாது; மாறாக, இவை தாவீதுக்குப் பொருத்தமானவைகளாயிருந்தன. இவை அப்சலோமைத் திருப்திப்படுத்தின என்பது உறுதி, அந்த இளம் கலகக்காரர் அரண்மனைக் குத் தொடர்ந்து சென்றார்.

அப்சலோம் அடுத்து என்ன செய்வதென்று நிச்சயமற்றிருந்தார். தாவீதின் முன்னாள் ஆலோசகரான அகித்தோப்பேல், அப்சலோம் தமது தந்தையைக் குறித்து அஞ்சவில்லை என்றும் அவ்விருவருக்கும் இடையி லிருந்த எல்லாப் பிணைப்புக்களும் முறிக்கப்பட்டன என்றும் மக்களுக்குக் காண்பிப்பதற்காக, அப்சலோம் முதலில் அவர் தமது தந்தையின் மறுமனையாட்டிகளிடம் பிரவேசிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.[16] அடுத்ததாக, அப்சலோம் இனியும் காலந்தாழ்த்தாமல் தாவீதை - அவர் இன்னமும் தலைசுற்றியவராயிருக்கும்போதே அவருக்கு வெளித்தள்ளும் அடியைக் கொடுக்க - பின்தொடர வேண்டுமென்று அறிவுறுத்தினார்:

> நான் பன்னீராயிரம் பேரைத் தெரிந்துகொண்டு எழுந்து, இன்று இராத்திரி தாவீதைப் பின்தொடர்ந்து போகட்டும். அவன் விடாய்த்தவனும் கை தளர்ந்தவனுமாயிருக்கையில், நான் அவனிடத் தில் போய், அவனைத் திடுக்கிடப் பண்ணுவேன் அப்பொழுது அவனோடிருக்கும் ஜனங்களெல்லாரும் ஓடிப்போவதினால், நான் ராஜா[17] ஒருவனை மாத்திரம் வெட்டி, ஜனங்களையெல்லாம் உம்முடைய வசமாய்த் திரும்பப்பண்ணுவேன் ... பின் ஜனங்கள் சமாதானத்தோடு இருப்பார்கள்' (17:1-3).

அப்சலோம், தமது தந்தையின் மறுமனையாட்டிகளிடம் பிரவேசிக்க வேண்டும் என்று அகித்தோப்பேல் கூறிய ஆலோசனை பேய்த்தனமான தாயிருந்தது,[18] ஆனால் இந்த ஆலோசனையோ மிகவும் மேன்மையான தாயிருந்தது.[19] இதை அப்சலோம் பின்பற்றியிருந்தால் வெற்றி நிச்சயமான

*தாகவும் துரிதமானதாகவும் இருந்திருக்கும். ஆயினும் தேவனுடைய அருளிரக்கத்தினால், அகித்தோப்பேலின் ஆலோசனையை அபத்தமாக்குதல் என்ற திட்டவட்டமான நோக்கத்திற்காகவே ஊசாய் எருசலேமில் இருந்தார். அப்சலோம் தமக்கு இரண்டாவது ஆலோசனை தேவை என்று முடிவுசெய்து ஊசாயை அழைத்தார்.*

*அப்சலோம் அகித்தோப்பேலின் திட்டத்தை குறிப்பிட்டபோது, ஊசாய் தம் அறிவைப் பயன்படுத்தி அகித்தோப்பேலின் வியூகம் ஏன் பயன்படாது என்பதற்கு மூன்று காரணங்களைக் கொடுத்தார்: (1) அது தாவீதின் யுத்தம் செய்யும் வல்லமையையும் அவரது விசேஷித்த படையின் வல்லமையையும் குறைத்து மதிப்பிட்டது. "உம்முடைய தகப்பனும் அவன் மனுஷரும் பலசாலிகள் ... வெளியிலே குட்டிகளைப் பறிகொடுத்த கரடியைப் போல மனமெரிகிறவர்கள்" (17:8). (2) அது தாவீதின் முன் கண்ணோக்கைக் குறைத்து மதிப்பிட்டது. தாவீது முகாமில் தங்கியிருக்க மாட்டார், ஆனால் அதற்கு மாறாக ஒரு கெபியில் தம்மை ஒளித்துக் கொண்டிருப்பார் (17:9). இவ்விதமாக, அவர்கள் (அகித்தோப்பேலுடன் செல்லும் வீரர்கள்) தாவீதின் படைமேல் விழும்போது, தாவீது வலையில் இருந்து தப்பிவிடுவார். (3) அது தாவீதின் இராணுவ நிபுணத்துவத்தைக் குறைத்து மதிப்பிட்டது. உண்மையில் ஊசாய், "தாவீதின் மனிதர்கள் இப்போது நம்மை எதிர்பாராத வகையில் தாக்கப் பதுங்கியிருப்பார்கள். இப்போது நாம் அவர்களைப் பின்தொடர்ந்து சென்றால், நாம் தோற்கடிக்கப்படுவோம் - நம் நோக்கம் இழந்து போகப்படும்" என்று கூறினார் (17:9, 10).*

*ஊசாய் கூறியதில் ஒரு சிறு துளி உண்மை கூட இருக்கவில்லை. அடிபட்ட தாவீது யோர்தான் நதிக்கு அருகில் நடுங்கிக் கொண்டு அமர்ந்திருந்தார். இராணுவ யுக்தி என்பது அவரது சிந்தையிலிருந்து வெகு தொலைவில் இருந்தது. அவர் வீறு கொண்டெழுந்த பெண் கரடி போலிருக்கவில்லை; அவர் அடிபட்ட ஒரு நாயைப் போலிருந்தார். ஆயினும் தாவீதின் [முன் அனுபவ] புகழ்ச்சியானது அப்சலோம் மற்றும் அவரது யுத்த வீரர்கள் ஆகியோரின் சிந்தைகளில் ஒரு கேள்விக்குறியை இட்டது.*

*ஊசாய் ஒரு மாற்றுத் திட்டத்தைக் குறிப்பிட்டார். அவர் அப்சலோமிடம் நாடு முழுவதிலுமிருந்து முடிந்த அளவுக்கு மாபெரும் படை ஒன்றைத் திரட்டுவது அவசியம் என்று கூறினார். பின்பு அப்சலோம் தாமே அந்தப்படையை வழிநடத்திச் செல்வது அவசியம்,[20] அதன் மூலம் வெற்றி அவரால் வந்தது, அவர் மட்டுமே அதற்குக் காரணம் என்பதை மக்கள் அறிவார்கள் [என்றும் ஊசாய் ஆலோசனை கூறினார்]. இதை அவர்கள் செய்தால், அவர்கள் தாவீதையும் அவரது மனிதர்களையும் மாவரைப்பது போல் அரைத்து விடலாம் என்று கூறினார்! அப்சலோம் வெற்றி ஊர்வலத்தில் எருசலேமுக்குத் திரும்புவதைக் கற்பனை செய்யுமளவுக்கு தாவீதின் தோல்வியைப் பற்றி ஊசாயின் சித்தரிப்பு அவ்வளவு விரிவானதாயிருந்தது! அவரும் அப்சலோமும் அவரது ஆலோசகர்களும், "அகித்தோப்பேலின் ஆலோசனையைப் பார்க்கிலும் அற்கியனாகிய ஊசாயின் ஆலோசனை நல்லது" என்றார்கள் (17:14). இவ்விதமாக*

*அகித்தோப்பேலின் ஆலோசனையை அபத்தமாக்க வேண்டும் என்ற தாவீதின் ஜெபத்திற்கு பதில் அளிக்கப்பட்டது.*

*அகித்தோப்பேல் தமது ஆலோசனை நிராகரிக்கப்பட்டது என்று கண்டபோது, அம்முதிய மனிதர் தமது கழுதையில் ஏறி, இல்லம் திரும்பி, தன் வீட்டுக்காரியங்களை ஒழுங்குபடுத்தி விட்டு, தற்கொலை செய்து கொண்டார் (17:23).*[21]

*ஊசாய் தாவீதுக்கு சிறிது கால அவகாசத்தைப் பெற்றுத் தந்தார், ஆனால் அப்சலோம் விரைவில் தமது மனதை மாற்றிக் கொண்டு தமது தந்தையை உடனே பின்தொடரக் கூடும் என்பதை ஊசாய் அறிந்திருந்தார். [எனவே] ஊசாய், ஆசாரியர்களான சாதோக், அபியத்தார் ஆகியோரிடத்தில் இரகசியமாகச் சென்று, "இப்பொழுதும் நீங்கள் சீக்கிரமாய்த் தாவீதுக்கு அறிவிக்கும்படிக்குச் செய்தி அனுப்பி: நீர் இன்று இராத்திரி வனாந்தரத்தின் வெளிகளிலே தங்க வேண்டாம்; ராஜாவும் அவரோடிருக்கிற சகல ஜனங்களும் விழுங்கப்படாதப்படிக்குத் தாமதம் இல்லாமல் அக்கறைப்பட வேண்டும் என்று சொல்லச் சொல்லுங்கள்" என்று கூறினார் (17:16).*

*சாதோக்கும் அபியத்தாரும் ஒரு வேலைக்காரியின் மூலம் அந்தச் செய்தியைத் தங்கள் மகன்களான யோனத்தானுக்கும், அகிமாசுக்கும் அனுப்பினார்கள்.*[22] *இந்த இரு இளைஞர்களும் இதைக் கூறத் தாவீதிடம் செல்லுகையில் கண்டுபிடிக்கப்பட்டார்கள், ஆனால் அவர்கள் ஒரு மனிதனாலும் அவரது மனைவியாலும் ஒரு கிணற்றினுள் ஒளித்து வைக்கப்பட்டார்கள்,*[23] *இவ்விதமாக அவர்கள் தப்பிச் சென்று தாவீதிடம் செய்தியைக் கொண்டு சென்றார்கள். யோர்தான் நதியை இரவில் கடந்து செல்லுதல் என்பது அபாயமானதாக இருந்தது, ஆனால் தாவீதும் அவரது மக்கள் குழுவும் உடனே நதியைச் சிரமத்துடன் கடந்து சென்றார்கள். "பொழுது விடிகிறதற்குள்ளாக யோர்தானைக் கடவாதவன் ஒருவனும் இல்லை" (17:22).*

*அந்த நிகழ்ச்சியில் தாவீதின் உயிரைக் காக்கப் பொறுப்புவகித்த மக்களின் சங்கிலித்தொடரைக் கவனியுங்கள்: ஊசாய் - சாதோக் மற்றும் அபியத்தார் - ஒரு வேலைக்காரி - யோனத்தான் மற்றும் அகிமாஸ் - பகூரிம் ஊரில் இருந்த ஒரு மனிதரும் அவரது மனைவியும். தேவன் அற்புதமான வழிகளில் செயல்படுகின்றார்! இதுபோன்ற வேளைகள்தாம் தாவீது பின்வருமாறு எழுதக் காரணமாயின: "துதிக்குப் பாத்திரராகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவேன்; அதனால் என் சத்துருக்களுக்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவேன்" (சங். 18:3).*[24]

*தேவன் தாவீதுக்கு உதவி செய்வதை இன்னும் முடித்திருக்கவில்லை: தாவீதும் அவரது மக்கள் குழுவும் யோர்தானின் கிழக்குப் பகுதியில் பாதுகாப்பாக [வந்து] சேர்ந்த பின்பு, அவர்கள் மக்னாயீமுக்கு வடக்கு நோக்கிப் புறப்பட்டுச் சென்றார்கள். மக்னாயீம் என்பது இஸ்போசேத் தலைநகராகப் பயன்படுத்திய நகராயிருந்தது. மக்னாயீமில் தாவீதுக்கு மூன்று மனிதர்கள் அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு வந்தார்கள். அவர்களின் பெயர்கள், வேதாகம வாசகர்களுக்கு, இந்தப் பாடத்தில் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் மற்ற பல பெயர்களைப் போன்றவை*

*களாகவே உள்ளன: "அம்மோன் புத்திரரின் தேசத்து ரப்பா பட்டணத்தானாகிய சோபி என்னும் நாகாசின் குமாரனும், லோதேபார் ஊரானாகிய அம்மியேலின் குமாரன் மாகீரும், ரோகிலிம் ஊரானும் கீலேயாத்தியனுமாகிய பர்சிலாவும்" (17:27). அவர்கள் "மெத்தைகளையும், கலங்களையும், மண்பாண்டங்களையும், கோதுமையையும், வாற்கோதுமையையும், மாவையும், வறுத்த பயற்றையும், பெரும் பயற்றையும், சிறு பயற்றையும், வறுத்த சிறு பயற்றையும், தேனையும், வெண்ணையையும், ஆடுகளையும், பால்கட்டிகளையும் ... கொண்டு வந்தார்கள்; 'அந்த ஜனங்கள் வனாந்தரத்திலே பசியும் இளைப்பும் தவனமுமாயிருப்பார்கள்' என்று இப்படிச் செய்தார்கள்" (17:28, 29).*

*தாவீதின் உதவிக்கு வந்த இவர்கள் வெவ்வேறு இனங்களைச் சேர்ந்தவர்களாயிருந்தார்கள். சோபி என்பவர் அம்மோனிய வம்சத்தவராயிருந்தார், இவர் நாகாசின் மகனாயிருந்தார் - இந்த நாகாஸ், தாவீதின் செய்தியாளர்களை அவமானப்படுத்தியிருந்த அம்மோனிய ராஜா ஒருவரின் சகோதரராக இருந்தார். மாகீர் என்பவர் வடக்கிலிருந்த லோதேபார் என்ற ஊரிலிருந்து வந்தவராயிருந்தார். அவர் மேவிபோசேத்தை வளர்த்தவராயிருந்தார். (மேவிபோசேத் அரியணையில் அமர நோக்கங் கொண்டிருந்ததாக சீபா கூறியது பொய் என்று நான் நம்புவதற்கு மாகீரின் இந்தப் பெருந்தன்மையான செயல் இன்னொரு காரணமாக உள்ளது. மேவிபோசேத் சூழ்ச்சி செய்திருந்தால், அநேகமாக அதில் மாகீரும் உடன்பட்டிருந்திருப்பார்.) மூன்றாவது உபகாரியான பர்சிலா என்பவர், கீலேயாத்தில் மக்னாயீம் ஊருக்கு அருகில் வாழ்ந்த செல்வந்தரான, வயது முதிர்ந்த/பழைய பாலைவன குடித்தலைவராக இருந்தார்.*

*இந்த மனிதர்கள் அத்தியாவசியப் பொருட்களை கொண்டுவருகையில் நாம், தாவீது புண்பட்டுக் கிடக்கும்போது, அவரது நண்பர்கள் அவர் பக்கமாய் ஓடிவந்ததையும், தாவீதின் இரக்கச் செயல் அவருக்குத் திரும்பி உதவியை பெற்றுத் தந்திருந்ததையும் மீண்டும் காண்கின்றோம். ஆயினும், இந்த நண்பர்கள் எல்லார் மூலமாகவும் தேவன் செயல்பட்டுக் கொண்டிருந்தார் என்பதை நான் வலியுறுத்த விரும்புகின்றேன். தேவன் நம்மைச் சிட்சிக்கும்போது கூட, நம்மைக் கைவிடாதிருக்கின்றார்.*

## *அவரது இருதயம் உடைக்கப்பட்டிருந்தது (17:24-26; 18:1-33)*

*தேவன் தாவீதுக்கு வேறு சிலவற்றைச் செய்தார்: அவர் தாவீதுக்கு அவர் [தாவீது] தம்மைத் தற்காத்து கொள்ள ஒரு படையைத் தந்தார். தாவீது எருசலேமை விட்டுப் புறப்பட்டபோது அறுநூறு போர்வீரர்கள் மாத்திரம் அவருடன் இருந்தார்கள். ஆயினும் நாம் அத்தியாயம் 18ஐ வாசிக்கத் தொடங்குகையில், தாவீது தமது படைக்கு "ஆயிரத்துக்கு அதிபதிகளையும், நூற்றுக்கு அதிபதிகளையும்" வைத்தார் என்று காண்கின்றோம் (வ. 1).[25] தாவீது மூன்று தளபதிகளைக் கொண்டிருந்தபடியாலும் (வ. 2) "ஆயிரங்கள்" என்ற வார்த்தை குறைந்தது இரண்டாயிரம் பேர் என்று மறைமுகமாய்*

*உணர்த்துகின்றபடியாலும், தாவீதின் அறுநூறு பேர் கொண்ட படை யானது ஆறாயிரமாக - ஒருவேளை அதை விட அதிகமாகப் - பெருகி இருந்தது![26] அப்சலோம் தமது படையை ஒன்றுகூட்டிக் கொண்டிருந்த வேளையில், பலர் அதை விட்டு விலகி தாவீதிடத்தில் வந்தார்கள் என்பது உறுதி.*

*ஆயினும், கடைசியில் அப்சலோம் தமது திரளான படையுடன் யோர்தானைக் கடந்து வந்து மக்னாயீமின் அருகில் இருந்த கீலேயாத்தில் பாளையம் இறங்கியிருந்தார்.[27]*

*அது இறுதியாகத் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டிய வேளையா யிருந்தது. தாவீது தம் துருப்புக்களிடத்தில், "நானும் உங்களோடே கூடப் புறப்பட்டு வருவேன்" (18:2) என்று கூறியிருந்தார். அவர்கள், "நீர் புறப்பட வேண்டாம்; நாங்கள் முறிந்தோடிப் போனாலும் அவர்கள் எங்கள் காரியத்தை ஒரு பொருட்டாக எண்ண மாட்டார்கள்; எங்களில் பாதிப் பேர் செத்துப் போனாலும், எங்கள் காரியத்தைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்கள்; நீரோ எங்களில் பதினாயிரம் பேருக்குச் சரி;[28] நீர் பட்டணத்தில் இருந்து கொண்டு,[29] எங்களுக்கு உதவிசெய்கிறது எங்களுக்கு நலமாயிருக்கும் என்றார்கள்" (18:3).*

*தாவீதின் பதிலை ஆழ்ந்து சிந்தியுங்கள்: "உங்களுக்கு நலமாய்த் தோன்றுகிறதைச் செய்வேன்" (18:4). தாவீது தமது தன்னம்பிக்கை மற்றும் தூண்டுதல் ஆகியவற்றில் அதிகமானதை இழந்துபோய் இருக்கலாம், ஆனால் அவர் சிட்சிக்கப்பட்டதின் மூலமாக [வேறு] சிலவற்றை ஆதாயப் படுத்தியிருந்தார்: அவர் பணிவையும் தாழ்மையையும் ஆதாயப்படுத்திக் கொண்டிருந்தார்.*

*வேதனை என்பது சிந்திக்கும் செயல்முறையை மந்தமாக்கக் கூடும். நீங்கள் சிட்சிக்கப்படும்போது, நீங்கள் அணுகக் கூடியவராகவும், விஷயங் களை உங்களை விடத் தெளிவாகக் காணக் கூடிய பிறரிடம் இருந்து வருகின்ற அறிவுரைகளுக்கு உங்கள் இருதயத்தைத் திறந்திருப்பவராகவும் இருக்க வேண்டியது அவசியமாகின்றது.*

*படை அணிவகுத்துச் சென்றபோது தாவீது, "பிள்ளையாண்டானாகிய அப்சலோமை என்னிமித்தம் மெதுவாய் நடப்பியுங்கள்" (18:5) என்று கெஞ்சினார். அப்சலோமின் யுத்தத் திட்டம் தெளிவாயிருந்தது: "என் தந்தை யைக் கொல்லுங்கள்; மற்றவர்களைப் பற்றிக் கவலையில்லை." தாவீதின் யுத்தத் திட்டமும் தெளிவாயிருந்தது: "என் மகனைக் கொன்று விடாதீர்கள்; மற்றவர்களைப் பற்றிக் கவலையில்லை."*

*யுத்தமானது அப்சலோமின் படைக்குப் பேரழிவைத் தருவதா யிருந்தது.[30] கீலேயாத்தின்[31] மரங்கள் அடர்ந்த குன்றுகளில் அவரால் ஒன்றும் செய்ய முடியாதிருந்தது. தாவீதின் மனிதர்களோ, கரடுமுரடு மிகுந்த பகுதியில் போரிடுவதில் அதிகம் பழக்கம் கொண்டிருந்தார்கள், அவர்கள் அப்சலோமின் மனிதர்களை, அடர்ந்த வனாந்தரப் பகுதிகளில் திகில் கொண்டு அலையும் வரை துரத்தியடித்தார்கள். அவர்களை ஒவ்வொரு வராகக் கொன்றார்கள்,[32] இருபதினாயிரம் பேர் கொல்லப்பட்டார்கள்.[33]*

*மக்னாயீமில் பின்னிட்டுக் காத்திருந்த தாவீது இழப்புக்களைப்*

*பற்றியோ, யார் வெற்றி பெற்றது என்பதைப் பற்றியோ கூட அக்கறை கொள்ளவில்லை. அவர் தமது மகனைப் பற்றியே அக்கறைக் கொண்டிருந் தார். அகிமாஸ் நகருக்குள் ஓடி வந்தார். இந்த அகிமாஸ், ஆசாரியரான சாதோக்கின் மகனாயிருந்தார் - இவர் யோர்தானிலிருந்த வேளையில் தாவீதுக்குச் செய்தி கொண்டு வந்தவராவார். அது நல்ல செய்திதான் என்று தாவீது யூகித்தார் (ஒருவேளை தோல்வி என்பது பல மனிதர்களை நகருக்குள் பத்திரமாய் ஓய்ந்திருக்கும்படி செய்யும் என்ற காரணத்தினால் இவ்வாறு அவர் நினைத்திருக்கலாம்). அகிமாஸ், "சமாதானம்" (18:28) என்று மட்டும் கூறியிருந்தார். அகிமாசைத் தொடர்ந்து கூஷி[34] வந்தார். தாவீது, ''பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா?'' என்று கேட்டபோது, கூஷி "அந்தப் பிள்ளையாண்டானுக்கு நடந்ததுபோல, ராஜாவாகிய என் ஆண்டவனுடைய சத்துருக்களுக்கும், பொல்லாப்புச் செய்ய உமக்கு விரோதமாய் எழும்புகிற யாவருக்கும் நடக்கக் கடவது" (18:32) என்று பதில் அளித்தார்.*

> *அப்பொழுது ராஜா மிகவும் கலங்கி, கெவுனிவாசலின் மேல்வீட்டிற் குள் ஏறிப்போய் அழுதான்; அவன் ஏறிப்போகையில்: "என் மகனாகிய அப்சலோமே, என் மகனே, என் மகனாகிய அப்சலோமே, நான் உனக்குப் பதிலாகச் செத்தேனானால் நலமாயிருக்கும்; அப்சலோமே, என் மகனே, என் மகனே," என்று சொல்லி அழுதான் (18:33).*

*உங்கள் மகன் நீங்கள் விரும்பியபடி உருவாகாமல் இருக்கலாம். அவனது வாழ்வுப்பாணி உங்களுடைய ஆத்துமாவைத் துக்கப்படுத்தியிருக்கலாம். என்ன நடந்திருந்தாலும் அவன் இன்னமும் உங்கள் மகனாகவே இருக்கின்றான், அவன் மீது துன்பம் விழும் வேளையில் நீங்கள் அழுது கதறுவீர்கள் [தானே?].*

*சிட்சித்தல் என்பது தப்பிக்க இயலாத வகையில் துயரத்துடன் பிணைக்கப்பட்டுள்ளது. நீங்கள் உங்களுக்காக மரிக்கவும் தயாராயிருக்கும் நண்பர்களினால் சூழப்பட்டிருக்கலாம். தேவன் உங்களுடன் இருக்கின்றார் என்றும் அவர் உங்களுக்கு உதவுகின்றார் என்றும் நீங்கள் அறிந்திருக்கலாம். அப்போதும் கூட கண்ணீர் பெருகியோடும், அப்போதும்கூட உங்கள் இருதயம் உடைந்துபோகும். சிட்சையும் வேதனையும் பிரிக்கப்பட இயலாது. "அவனவன் தன்தன் பாரத்தை [அல்லது சுமையை] ச் சுமப்பானே" (கலா. 6:5).*

## *அவர் யோவாபினால் கடிந்து கொள்ளப்பட்டார் (19:1-8அ)*

*நாம் சிட்சிக்கப்படுகையில், அது நமக்குக் கவலை தரக்கூடிய வேளையாக உள்ளது என்றும் அதை நாம் மறுக்கத் தேவையில்லை என்றும் நான் முன்பே குறிப்பிட்டிருந்தேன். நமது உணர்வுகளை ஆரோக்கியமான வகையில் வெளிப்படுத்துதல் என்பது குணமாகும் செயல்முறையின் பாகமாக உள்ளது. அதிகமாகக் கவலையில் ஆழ்ந்துபோவது என்பது*

*ஆரோக்கியமானதல்ல. அது நம்மை களைப்புள்ளவர்கள் ஆக்குவதோடு நம்மைச் சுற்றியிருப்பவர்களையும் உற்சாகம் குன்றச் செய்கின்றது. தாவீது தமக்குத்தாமே கவலையில் ஆழ்ந்திருந்தார்.*

*தாவீது நொறுக்கப்பட்டார் என்பது புரிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது. அவர் அப்சலோமுக்காக மட்டும் அழவில்லை, ஆனால் அவர் தமக்காகவும் என்னவாகியிருக்கும் என்பதற்காகவும் அழுதார். ஆயினும் அவரது துக்கம் அறிவுக்கேற்றதாக இருக்கவில்லை. அவரது அரியணையும் அவரது மகனும் [ஒரே வேளையில்] பிழைத்திருக்கக் கூடிய வழியெதுவும் இராது போயிற்று. மேலும், அவருடைய துக்கத்தின் அதிகமான மற்றும் வெளியரங்கமான தன்மைகள், அவர் தமது வேதனையைப் பற்றி மட்டும் கவலைப்பட்டார் என்பதையும் அவர் பிறரைக் குறித்து அக்கறையற்று இருந்தார் என்பதையும் சுட்டிக்காண்பித்தன. தமக்கு மிகவும் அன்பார்ந்த ஒருவரை இழந்து போயிருந்தவர் அவர் ஒருவர் மட்டும் அல்லவே. யுத்தகளத்தில் குறைந்தபட்சம் இருபதினாயிரம் பேர்கள் இறந்துபோயிருந் தார்கள். பல்லாயிரக்கணக்கானவர்கள் தங்கள் மகன்கள், பேரன்கள், கணவர்கள், தந்தையர்கள், மற்றும் சகோதரர்களை இழந்து துக்கித்துக் கொண்டிருந்தார்கள்.*

*பிறரைப் பற்றிச் சிந்தித்தல் என்பது இதற்கு முன்பு தாவீதின் பலத்த கருத்துக்களில் ஒன்றாயிருந்தது. இப்போது, அப்சலோமை இழந்த துக்கத்தினால் மூடப்பட்ட அவர், ஒரு (சுரங்கப் பாதை போன்ற) குறுகிய கண்ணோக்கை வளர்த்துக் கொண்டார்.*

> *"ராஜா தம்முடைய குமாரனுக்காக மனம் நொந்திருக்கிறார்" என்று அன்றைய தினம் ஜனங்கள் கேள்விப்பட்டார்கள்; அதினிமித்தம் அன்றைய தினம் அந்த ஜெயம் ஜனத்திற்கெல்லாம் துக்கமாய் மாறிற்று. யுத்தத்தில் முறிந்தோடுகிறதினால் வெட்கப்பட்டு திருட்டளவாய் வருகிறவர்கள் போல, ஜனங்கள் அன்றைய தினம் திருட்டளவாய்ப் பட்டணத்திற்குள் வந்தார்கள் (19:2, 3).*

*தாவீதின் துக்கம் அவரைப் பின்பற்றிய எல்லாருடைய வாழ்வின் குறுக்கேயும் ஒரு நிழலை வீசிற்று.*

*ராஜதந்திரியான யோவாப் [இதற்குமுன்] ஒருக்காலும் தாவீதை [இந்த அளவுக்கு] திட்டி நொறுக்கியதில்லை.[35] 19:5-7ல் அவர் உண்மையில், "உம் மனிதர்கள் உமக்காகத் தங்கள் உயிரைப் பணயம் வைத்தார்கள், நீரோ அவர்கள் வெற்றி பெற்றோம் என்பதற்குப் பதில் தோல்வியடைந்தோம் என்பது போல் அவர்களை உணரச் செய்கின்றீர்! அவர்கள் எல்லாரும் இறந்துபோய் அப்சலோம் உயிருடன் இருந்தால் நீர் சந்தோஷமாயிருப்பீர் என்பதை நீர் தெளிவாக்கி விட்டீர். அங்கிருந்து நீர் வெளியேறி உமது பாராட்டுதலை வெளிப்படுத்தும்! நீர் இதைச் செய்யவில்லையென்றால், நாளை காலையில் உம்மை ஆதரிக்க இங்கு ஒருவர் கூட இருக்க மாட்டார். அதற்குப் பின்புதான் நீர் உண்மையாகவே கடினமான வேளை எது என்பதைக் கண்டறிவீர்!"[36]*

*இவைகள் கடினமான வார்த்தைகளாக, வேதனைமிகுந்த வார்த்தை*

களாக இருந்தன, ஆயினும் அவைகளில் இருந்த உண்மைத் தன்மையைத் தாவீது மறுக்கக் கூடாதிருந்தது. யோவாபின் வார்த்தைகள் தாவீதின் மனச்சாட்சியை விழித்தெழுப்பும் அழைப்பாயிருந்தன.

நாம் கர்த்தரால் சிட்சிக்கப்படும்போது, சில வேளைகளில் நாம் அறிவற்றதன்மையில் நடந்துகொண்டு பிறரைப் புண்படுத்துமளவுக்கு வேதனை மிகவும் பெரியதாகின்றது. அப்போது தேர்ந்துகொள்ளப்பட்ட ஒரு சில வார்த்தைகளால் நமது உணர்வுகளை/புலன்களை அதிர்ச்சியூட்டும் நண்பர்கள் நமக்குத் தேவைப்படுகின்றார்கள். அந்த வேளையில் அது நம்மைப் புண்படுத்தும்; நாம் அவர்களின் எதார்த்த தன்மையைக் குறித்து வெறுப்புணர்வடைவோம்; ஆனால் இந்த நண்பர்களே நமக்குள் மிகச் சிறந்த நண்பர்களாக இருக்கின்றார்கள். "சிநேகிதன் அடிக்கும் அடிகள் உண்மையானவைகள்; சத்துரு இடும் முத்தமோ வஞ்சனையுள்ளவைகள்!" (நீதி. 27:6; LB).

தாவீது தாம் புலம்பிக் கொண்டிருந்த அறையைவிட்டு வெளியில் வந்தார், வாசலுக்குச் சென்றார், அங்கு வந்திருந்தவர்கள் குறித்துத் தமது அக்கறையைக் காண்பித்தார்.[37] அவர்களுடன் சேர்ந்து அவரும் சற்றே அழுதார். சற்றே நன்றி செலுத்தினார். சற்றே பாராட்டினார். கடைசியில் மக்கள் தங்கள் வெற்றியைக் கொண்டாட முடிந்தது.

துக்கப்பட ஒரு காலமுண்டு, ஆனால் மீண்டும் வாழத்தொடங்கவும் ஒரு காலமுண்டு (பிர. 3:4). நமது வேதனைகளைப் பேண ஒரு காலமுண்டு, ஆனால் சுய-பட்சாதாபம் என்ற இருட்டறையை விட்டு வெளியேறி மற்றொருவரின் வேதனையைக் குணமாக்க உதவவும் ஒரு காலமுண்டு.

## அவர் சமாதானத்தை ஏற்படுத்த முயற்சி செய்தார் (19:8ஆ-20:26)

ஆட்சிக்கு எதிரான கலகம் ஒரு சில வாரங்களிலேயே ஓய்ந்து போயிற்று. குறித்த வேளையில் உள்நாட்டுப் போர் முடிவு பெற்றிருந்தது. [ஆயினும்] இது, எல்லாம் முன்பு இருந்தது போலாயிற்று என்று அர்த்தப்படுத்தவில்லை. பிரிவினைக்குப் பிந்திய விளைவுகள், தொடக்கத் திலிருந்த கலகத்தை விட அதிகமாக அழிவைத் தருபவைகளாக இருக்கக் கூடும். அத்தியாயம் 19ன் கடைசிப் பகுதியில், தாவீது நாட்டில் சமாதானத்தை மீளக்கட்டியெழுப்பவும், கடந்த காலத்தைப் பின்வைத்து உதாரணத்தை அமைக்கவும் முயற்சி செய்தார்.

எழுத்தாளர்களும், விளக்கவுரையாளர்களும், தாவீது எருசலேமுக்குத் திரும்பி வந்த வேளையில் என்ன செய்திருக்க வேண்டும் அல்லது என்ன செய்திருக்கக் கூடாது என்பது பற்றி இரண்டாம் யூகம் செய்யும் வகையில் ஒரு களநாளைக் கொண்டுள்ளனர். பின்வரும் மூன்று உண்மைகளைச் சிந்தையில் வைக்கவும்: (1) தாவீது மனம் சிதறடிக்கப்பட்ட மனிதராக இருந்தார், அவரது இருதயம் இன்னும் வேதனையாலும் குற்ற உணர்வாலும் நிறைந்திருந்தது. (2) தாவீது செய்வதற்குச் சுலபமாயிராத உடனடியான முடிவுகள் பலவற்றை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

*(3) ஒரு சீர்கேட்டிற்குப் பின்பு நீங்கள் குளறுபடியானவற்றைச் சுத்தம் செய்ய முயற்சி செய்கின்றபோது, நீங்கள் வெற்றியடைய இயலாத சூழ்நிலையில் இருக்கின்றீர்கள். எல்லா விஷயங்களும் ஆழ்ந்து சிந்திக்கப்பட்டன, சமாதானத்தை மீளக்கட்டியெழுப்ப தாவீது மேற்கொண்ட முயற்சிகள் குறிப்பிடத்தக்கவைகளாயிருந்தன.*

*18:16, 17 விட்ட இடத்திலிருந்து, 19:8ன் கடைசிப்பகுதியானது தொடருகின்றது. தோல்வியுற்ற இஸ்ரவேலர்கள் இல்லங்களுக்குத் திரும்பி [ஓடி] யபோது, அவர்கள் தாங்கள் அப்சலோமை ராஜாவாக அபிஷேகம் செய்திருந்த வேளையில் பெற்றிருந்ததை வசதியாக மறந்து போயிருந்தார்கள் - தாவீது தாம் அவர்களின் விரோதிகளை முறிய அடித்திருந்தார், தாவீது தாம் அவர்களின் வளமான வாழ்வுக்குக் காரணா யிருந்தார். வ. 10ன் முடிவில் அவர்களின் வார்த்தைகள் ஆர்வத்திற்குரியவை களாயிருக்கின்றன: "இப்போதும் ராஜாவைத் திரும்ப அழைத்து வராமல் நீங்கள் சும்மாயிருப்பானேன்?" அவர்கள் சொல்வதை கேட்க முடிகின்றதா?*

*"நாம் இந்தக் குளறுபடியில் இருப்பது என் தவறல்ல. இது உன் தவறு!"*

*"என்ன விளையாடுகிறாயா? அப்சலோமின் ராஜ அபிஷேகத்தின்போது அங்கு நான் உன்னைப் பார்த்தேனே!"*

*"நான் ஆர்வமேலீட்டினால் மட்டுமே அங்கிருந்தேன். உண்மையில் எல்லா வேளைகளிலும் நான் அவனுக்கு எதிரானவனாகவே இருந்தேன்!"*

*"நிச்சயமாக நீ அப்படியே இருந்தாய்! இப்போது நமக்கு அரசர் இல்லை - நாம் பெலிஸ்தருக்கு எளிதில் இரையாவோம். தாவீதைத் திரும்பி வருமாறு கேட்டுக் கொள்வதற்கு யாராவது தேவை."*

*"சரிதான், நீ அதைச் செய்யேன்."*

*"இல்லை நீயே அதைச் செய்யேன்."*

*வடக்குக் கோத்திரத்தார் கூறிக்கொண்டிருந்தவை பற்றிய வார்த்தை தாவீதை வந்தடைந்தது. ஆயினும், தாவீது யூதா கோத்திரத்தைப் பற்றி மிகவும் அக்கறை கொண்டிருந்தார். ஆட்சிக்கு எதிரான கலகமானது யூதாவிலிருந்த எப்ரோனில் தான் உச்சகட்டத்தை அடைந்திருந்தது. அதற்கு முக்கிய காரணமானவர்களான அப்சலோம், அவரது ஆலோசகரான அகித்தோப்பேல், அவரது படைகளின் தளபதியான அமாசா ஆகியோர் யூதா கோத்திரத்திலிருந்து வந்தவர்களாகவே இருந்தார்கள். தாவீது தாம் திரும்ப வரும்வேளையில் தம்மை அழைப்பிக்கும் செயலில் முன்னின்று நடத்த யூதாவின் மூப்பர்களிடத்தில் வேண்டுகோள் விடுக்கும்படி சாதோக் மற்றும் அபியத்தார் ஆகியோருக்கு வார்த்தை அனுப்பினார். இவ்விதமாக அவர், அந்த மூப்பர்களின் கலக எண்ணப்போக்கைக் குறித்து அவர்களுக்கெதிராக தாம் எந்த விரோதமும் கொண்டிருக்கவில்லை என்பதை அவர்கள் அறியச் செய்தார்.*

*அடுத்து, தாவீது யோவாபுக்குப் பதிலாக அமாசாவைத் தமது படைத் தளபதியாக நியமித்தார்.[38] அமாசா செய்த சூழ்ச்சியினிமித்தம் அவரை விசாரணை செய்து மரணதண்டனை விதித்திருக்கலாம், ஆனால் அதற்குப் பதிலாகத் தாவீது, அவரை கிருபையாக மன்னித்து விட்டார். அவரைத் தளபதியாக்கியதில் தாவீது, (அமாசா அந்தக் கோத்திரத்திலிருந்து வந்தவர்*

*என்பதால்) யூதாவுக்கும், (அமாசா இஸ்ரவேலின் படையை தலைமை வகித்து நடத்தினார் என்பதால்) இஸ்ரவேல் முழுவதற்கும் நட்புறவை நீட்டித்தார்.*

*தாவீது குற்றப்படுத்தப்பட்ட/பாதிக்கப்பட்ட குழுவில் இருந்தாலும், அவர் [தம்மை] குற்றப்படுத்தியவர்களுடன்/பாதித்தவர்களுடன் உறவு முறையை மீளக்கட்டியெழுப்புவதில் முன்னிலை வகித்தார் - இது நாம் யாவரும் பின்பற்ற வேண்டிய உதாரணமாக உள்ளது. பரிசோதித்தல் என்பது சிட்சித்தலின் நோக்கங்களில் ஒன்றாக உள்ளது என்பதை நினைவில் வையுங்கள். நாம் மன்னிக்கும் இருதயங்களைக் கொண்டுள்ளோமா என்பதைக் காண்பது பரிசோதனைகளில் ஒன்றாக இருக்கலாம் (எபே. 4:31, 32).*

*தாவீதின் நடவடிக்கைகள் யூதேயாவில் இருந்தவர்களை மகிழ்வித்தன, அவர்கள் ஒருமனப்பட்டு, "நீர் உம்முடைய எல்லா ஊழியக்காரரோடும் திரும்பி வாரும்" (19:14) என்று கூறி வார்த்தை அனுப்பினார்கள்.*

*தாவீதும் அவரது குடும்பத்தவரும் நண்பர்களும் எருசலேமுக்குத் திரும்பப் பயணமாகத் தொடங்கினார்கள். மக்கனாயீம் ஊரில் தாவீது இருந்த வேளையில் அவருக்கு அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு வந்திருந்த கீலேயாத்தியனான பர்சிலாய் தாவீதுடன் இருந்தார்.[39] தாவீது நன்றியுணர்வு நிரம்பப் பெற்றவராக இருந்தார். அவர்கள் யோர்தானை நெருங்கிய வேளையில், தாவீது அந்த முதியவரை எருசலேமுக்குத் தம்முடன் திரும்பும்படி வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார். பர்சிலாயோ, அரண்மனை வாழ்வின் வசதிகளையும் உவகைகளையும் மகிழ்வுடன் அனுபவிப்பதற்கு தாம் மிகவும் வயது சென்றவராயிருப்பதாகப் பதில் அளித்தார். அவர் தமது மகனைச்[40] சுட்டிக்காண்பித்து, "ஆனாலும், இதோ, உமது அடியானாகிய கிம்காம் ராஜாவாகிய என் ஆண்டவனோடே கூட வருவான்; உம்முடைய பார்வைக்கு நலமானபடி அவனுக்குச் செய்யும் என்றான்" (19:37). அந்த ஏற்பாட்டை ஒப்புக் கொண்ட தாவீது, பின்பு தமது முதிய நண்பரைக் கட்டித்தழுவி [முத்தமிட்டு] ஆசீர்வதித்தார். கடினமான வேளைகளில் உங்களுக்கு உதவியவர்களை மறவாதீர்கள்!*

*தாவீது யோர்தானை அடைந்தபோது, ராஜாவை இல்லத்திற்கு மீண்டும் வரவேற்பதற்கு யூதாவில் இருந்து வந்திருந்த எதிர்பாராத பெரிய கூட்டத்தைச் சந்தித்தார். ராஜா அவர்களின் பார்வைக்குப் பட்டதும் அவர்கள் உரத்த சத்தமிட்டதை நான் கேட்கின்றேன் - இது தாவீது நள்ளிரவில் திருட்டளவாய் ஓடியதற்கு எவ்வளவு நேர்மாறானதாக உள்ளது!*

*தாவீது, தங்களைப் பற்றி மட்டுமே அக்கறை கொண்டிருந்த, அந்த மகிழ்பொங்கும் வைபவத்தைத் தங்களுக்கு அனுகூலமாக்கிக் கொள்ள மட்டும் விரும்பிய மற்றவர்களாலும் எதிர்கொள்ளப்பட்டார். அங்கு சீபா இருந்தார். தாவீது எருசலேமுக்குத் திரும்புவது பற்றியும் தாம் [முன்பு கூறிய] மேவிபோசேத்தின் கதையில் அவருடைய [மேவிபோசேத்துடைய] பக்க[த்து நியாய]த்தைக் கேட்பது குறித்தும் பதட்டமடைந்தார். ராஜாவைத் தம் பக்கம் காத்துக்கொள்ளும் முயற்சியில், சீபாவும் அவரது மகன்களும்,*

வேலைக்காரர்களும், தாவீதையும் அவரது வீட்டாரையும் யோர்தானுக்கு இக்கரைப்படுத்த தூக்கிக் கொண்டு வந்தார்கள்.[41]

*சீமேயி* - ராஜா எருசலேமை விட்டுச் சென்ற வேளையில் அவரைச் சபித்து கற்களை அவர்மீது எறிந்த பித்துப் பிடித்த மனிதரான சீமேயி - அங்கிருந்தார். தாவீது தலைநகருக்குத் திரும்பி வருகிறார் என்று அவர் கேள்விப்பட்டபோது அவர் பயம்கொண்டு நடுங்கினார் என்று உங்களுக்குத் தெரியாதா? நதிக்கரையில் சாஷ்டாங்கமாய் விழுந்த சீமேயி இரக்கத்திற்காகக் கெஞ்சினார். "நான் பாவஞ் செய்தேன்" (19:20) என்று அவர் கதறினார்.[42] அவர் பென்யமீன் கோத்திரத்தில் இருந்து ஆயிரம் பேர்களின் துணையுடன் வந்திருந்தார். அவர்களை நோக்கிக் கையசைத்த சீமேயி, உண்மையில் "உம்மை இல்லத்திற்கு வரவேற்க வடக்கு கோத்திரங் களில் இருந்து நாங்கள் முந்திக் கொண்டவர்களாயிருக்கட்டும்!"[43] என்று கூறினார்.

வழக்கம் போல் அபிசாய் அந்த இடத்திலேயே சீமேயியைக் கொலை செய்யத் தயாராக இருந்தார். அபிசாய் ஒவ்வொரு பிரச்சனைக்கும் ஒரே தீர்வைக் கொண்டிருந்தார். (அவர் ஒரு மாபெரும் போர்வீரராயிருந்தார், ஆனால் நீங்கள் அவரை அயலகத்தாராய்க் கொண்டிருக்க விரும்ப மாட்டீர்கள்!) தாவீது உண்மையில், "இது அகம் மகிழ்வதற்கான நாள், இரத்தம் சிந்துவதற்கான நாள் அல்ல" என்றே கூறினார். அவர் தமது காலடியில் வருந்திப் புலம்பிக் கொண்டிருந்த மனிதரிடம் "நீ சாவதில்லை" (19:23) என்று கூறினார்.[44]

தாவீதும் அவருடன் இருந்த மக்கள் குழுவும் யோர்தானில் இருந்து எருசலேமை நோக்கிப் பயணம் தொடர்ந்தார்கள். அவரது வழிநடையில் திரளான கூட்டத்தார் வரிசையில் நின்று, அவர் கடந்து செல்லுகையில் ஆரவாரமிட்டு அகம் மகிழ்ந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

ராஜா எருசலேமை நெருங்கி வருகையில், அவர் *மேவிபோசேத்தால்* சந்திக்கப்பட்டார். அந்த இளைஞர் வீடில்லாத நாடோடி போல் காணப் பட்டார். "ராஜா போனநாள்முதல், அவன் சமாதானத்தோடே திரும்பி வருகிற நாள்மட்டும், அவன் தன் கால்களைச் சுத்தம் பண்ணவுமில்லை, தன் தாடியைச் சவரம் பண்ணவுமில்லை, தன் வஸ்திரங்களை வெளுக்கவு மில்லை" (19:24). இது மேவிபோசேத்தினால் ஏற்பட்ட புதிர்க் கதையல்ல; இது உண்மையில் நடந்த விஷயம் என்று ஏவுதல் பெற்ற எழுத்தாளர் கூறினார். இந்த பதில்செயல், அரியணையைக் கைப்பற்ற சூழ்ச்சி செய்த மனிதருக்குப் பொருந்துவதாயிருந்ததில்லை; இது ராஜாவும் நண்பருமான தாவீது தப்பி ஓடிய நிலை பற்றி இருதயம் உடைந்துபோன மனிதருக்கே பொருந்துவதாயிருந்தது.

மேவிபோசேத்தின் தோற்றமானது தாவீதை, சீபாவின் கதையைப் பற்றி இரண்டாவது நினைவை மேற்கொள்ளும்படி வற்புறுத்திற்று. அவர், "மேவிபோசேத்தே, நீ என்னோடு கூட வராமல் போனது என்ன?" (19:25) என்று கேட்டார். மேவிபோசேத்தின் பதில், இருதய நாளங்களை இழுப்பதாயிருந்தது:

*ராஜாவாகிய என் ஆண்டவனே, என் வேலைக்காரன் என்னை மோசம்போக்கினான்; உமது அடியானாகிய நான் முடவனானபடியினால், "ஒரு கழுதையின்மேல் சேணம் வைத்து அதின்மேல் ஏறி, ராஜாவோடே கூடப் போகிறேன்" என்று அடியேன் சொன்னேன். அவன் ராஜாவாகிய என் ஆண்டவனிடத்தில் உமது அடியான்மேல் வீண்பழி சொன்னான். ராஜாவாகிய என் ஆண்டவனோ தேவனுடைய தூதனைப் போல இருக்கிறார்;[45] உமது பார்வைக்கு நலமாய்த் தோன்றுகிறபடி செய்யும் ... உமது பந்தியிலே சாப்பிடுகிறவர்களோடே உமது அடியேனை வைத்தீர்; இன்னும் நான் ராஜாவிடத்தில் முறையிட, இனி எனக்கு என்ன நியாயம் இருக்கிறது (19:26-28).*

*"நான் இப்போது என்ன செய்யலாம்?" என்று தாவீது நினைப்பதை நான் காண்கின்றேன். கடைசியில் அவர், "நீயும் சீபாவும் நிலத்தைப் பங்கிட்டுக் கொள்ளுங்கள்" (19:29) என்று கூறினார். அது ஒரு பூரணப்பட்ட தீர்வாக இருந்ததில்லை, ஆனால் தாவீது தம்மால் இயன்ற வரையில் சிறப்பாகப் பழுதைச் சரி செய்தார்.[46] மேவிபோசேத் தாராள குணத்துடன், "ராஜாவாகிய என் ஆண்டவன் சமாதானத்தோடே தம்முடைய வீட்டிற்கு வந்திருக்கும்போது, அவனே எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளட்டும்" (19:30;* LB*) என்று பதில் அளித்தார்.*

*கடுமையான சோதனையின் பின்விளைவில், நீங்கள் சில வேளைகளில் கண்மூடித்தனமான வார்த்தைகளைப் பேசுவதை, உணர்வுகளைப் புண்படுத்துவதை அல்லது மோசமான நியாயத் தீர்ப்புகள் ஏற்படுத்துவதைக் கண்டுபிடிப்பீர்கள். விஷயம் அவ்வாறாகும்போது, நீங்கள் இன்னொரு வாய்ப்பைப் பெற்றிருந்து, உங்களால் இயன்றவரை விஷயங்களை நேராக்க முடிந்ததென்றால் கர்த்தருக்கு நன்றிசெலுத்துங்கள். இது பற்பசையை எடுத்து விட்டு மீண்டும் அதை பற்பசைக் குப்பிக்குள் செலுத்த முயற்சிப்பது போன்றதாக இருக்கலாம், ஆனால் உங்களால் இயன்ற அளவுக்குச் சிறப்பாகச் செயல்படுங்கள். ஒருவேளை தேவன் உங்கள் முயற்சிகளைப் பாராட்டும் மேவிபோசேத்தை உங்களுக்கு உடன் வைத்து உங்களை ஆசீர்வதிப்பார்.*

## *பிரச்சனைகள் தீர்ந்துபோவதில்லை (19:40-20:26)*

*தாவீது, சமாதானத்தை ஏற்படுத்தவும் உறவுமுறைகளைப் பழுது நீக்கவும் தம்மால் இயன்றவற்றைச் செய்து கொண்டே, நகரத்தை நோக்கிப் பயணத்தைத் தொடர்ந்தார். தாவீது கூட்டத்தை நோக்கிக் கையசைக்கையில், "இதை நாம் இப்போது பின்வைத்து விட்டு, குணமாக்கும் செயல்முறையைத் தொடங்கலாம்" என்று நினைத்திருப்பார் என்பதாக நான் கற்பனை செய்கிறேன்.*

*அது அவ்வாறு இருந்ததில்லை. தாவீது அரியணைக்கு வந்த உடனே, அவர் வடக்குக் கோத்திரங்களில் இருந்தும் யூதா கோத்திரத்தில் இருந்தும் வந்த பிரதிநிதிகளால் மொய்க்கப்பட்டு, அவர்களின் குழுக்கள் ராஜாவின்*

*திரும்புதல் குறித்து தவறாக நடத்தப்பட்டது பற்றிச் சச்சரவு செய்தார்கள். அவர்களில் ஒரு குழுவினர் ராஜாவின் கழுத்தில் ஏந்திரக்கல்லைக் கட்டியிருந் தார்கள்; இன்னொரு குழுவினர் அவர் மூழ்கிப் போகும்படிக்கு அவரைச் சமுத்திரத்தில் தள்ளிவிட்டிருந்தார்கள்; இப்பொழுது அவர்கள், அவரை வெளியில் இழுப்பது யார் என்பது குறித்துச் சச்சரவு செய்தார்கள்!*

*தாவீதுக்கு நேர்ந்த கேடுகளுடன் கூட்டுவதற்கு, வடக்கு கோத்திரங் களின் மத்தியில் எழுந்த மகிழ்ச்சியின்மை, "சேபா என்னும் பேருள்ள பேலியாளின் மனுஷன்" (20:1) ஒருவனால் கலகம் விளைவிக்க செய்யப் பட்ட இன்னொரு முயற்சியை விளைவித்தது. இந்தக் கலகத்தை அடக்கு வதற்கு, யோவாப் தாம், தாவீதின் படையில் தமது பழைய பொறுப்பான தளபதி பணிக்குத் திரும்பக் கூடும்படிக்கு அமாசாவைக் கொலை செய்தார் (2 சாமு. 20:23ஐக் கவனிக்கவும்).*

*தாவீது பெருமூச்சு விட்டு, வானத்தை நோக்கித் தம் கண்களை ஏறெடுத்து, "கர்த்தரே, எனக்குப் பெலன் தாரும்!" என்று ஜெபிப்பதை நான் காண்கின்றேன்.*

## *அவர் கர்த்தர் மீது நம்பிக்கையாயிருந்தார்*

*நாம் இந்தப் பாடத்தை முடிக்கையில், "இவற்றினூடே கடந்து செல்லத் தாவீது எவ்வாறு பெலம் பெற்றார்?" என்று கேட்பது அவசியமாக உள்ளது. கர்த்தர் அவருடன் இருந்தார் என்பதே இதற்குப் பதிலாக உள்ளது (2 சாமு. 18:28, 31ஐக் காணவும்). சங்கீதம் 3 மற்றும் 4 ஆகியவற்றின் முன்குறிப்பு களைக் காணவும். இவைகள், "தாவீது தன் குமாரனாகிய அப்சலோமுக்குத் தப்பி ஓடிப்போகையில்" அவர் செய்த காலை மற்றும் மாலை ஜெபங்களாக உள்ளன. இவ்விரு சங்கீதங்களும் பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு தொடங்குகின்றன:*

> *கர்த்தாவே, என் சத்துருக்கள் எவ்வளவாய்ப் பெருகியிருக்கிறார்கள்!*
> *எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள் அநேகர் ...*
> *ஆனாலும் கர்த்தாவே, நீர் என் கேடகமும், என் மகிமையும்*
> *என் தலையை உயர்த்துகிறவருமாயிருக்கிறீர்*
> *(சங். 3:1-3).*

*இவைகள் பின்வரும் வார்த்தைகளுடன் முடிகின்றன.*

> *கர்த்தாவே, உம்முடைய முகத்தின் ஒளியை எங்கள்மேல் பிரகாசிக்கப் பண்ணும்!*
> *... அதிக சந்தோஷத்தை என் இருதயத்தில் தந்தீர்.*
> *சமாதானத்தோடே படுத்துக் கொண்டு நித்திரை செய்வேன்;*
> *கர்த்தாவே, நீர் ஒருவரே என்னைச் சுகமாய்த் தங்கப்பண்ணுகிறீர்*
> *(சங். 4:6-8).*

*நம் வழியில் இடர்ப்பாடுகள் வரும்போது, நாம் நமது கைமுஷ்டி களைத் தேவனிடத்தில் குலுக்கி/உயர்த்திக் காண்பிக்கவோ அல்லது நமது*

*கரங்களை ஜெபத்தில், விண்ணப்பத்தில், துதியில் உயர்த்தவோ முடியும். தாவீது பிந்திய செயலைச் செய்தார். தாவீது தேவன்மீது நம்பிக்கையா யிருந்தபடியால், கொந்தளிப்பான காலங்கள் முழுவதிலும் இதைச் செய்தார்.*

## *முடிவுரை*

*நமது பாடங்களின் திட்டத்தில், கர்த்தருடைய சிட்சையை சாந்தமாய் ஏற்றுக் கொள்வது எப்படி என்பதற்கு நான் பல ஆலோசனைகளை முன் வைத்தேன். அவற்றில் உள்ளவைகள் பின்வருமாறு:*

*உங்கள் எதிர்காலத்தைத் தேவனுடைய கரங்களில் வைத்து அவரில் நம்பிக்கையாயிருங்கள். தேவன் உங்களைச் சிட்சிக்கும்போது கூட அவர் உங்களைக் கைவிடுவதில்லை.*

*தேவனுடனான உங்கள் உறவையும் பிறருடனான உங்கள் உறவு களையும் பெலப்படுத்துவதன் மூலம் எதிர்காலப் பிரச்சனைகளுக்கு இப்போதே தயாரிப்பை மேற்கொள்ளுங்கள்.*

*உங்களுக்கு உதவி உங்களை நிலைநிறுத்தும் நண்பர்களுக்காக தேவனு க்கு நன்றி செலுத்துங்கள் - அவர்களை மறவாதிருங்கள்.*

*நீங்கள் பாவத்தில் அகப்பட்டிருக்கும்போது உங்கள் உணர்வுகளைத் திருப்புவதற்காக, உங்களுக்கு அதிர்ச்சியூட்டும் நண்பர்களுக்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.*

*உங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த அஞ்சாதீர்கள், ஆனால் சுய-பட்சாதாபத்தில் அதிகமாக மூழ்கிப்போய் விடாதீர்கள்.*

*உங்களை விட்டு வெளியே வந்து, பிறரின் தேவைகளை, விசேஷமாக உங்களுக்கு நடந்தவற்றால் பாதிக்கப்பட்ட பிறரின் தேவைகளைக் குறித்துக் கவனம் செலுத்துங்கள்.*

*வேதனையானது உங்களின் தெளிவாகச் சிந்திக்கும் திறனை மந்தமாக்கக் கூடும் என்பதைப் பற்றி எச்சரிக்கையாயிருங்கள். உங்களை விட சூழ்நிலையைத் தெளிவாகக் காணக்கூடிய மற்றவர்களுடைய ஆலோசனைக்குத் திறந்தவர்களாய் இருங்கள்.*

*நீங்கள் மீண்டும் தெளிவாகச் சிந்திக்க முடியும்போது, நீங்கள் சில மோசமான தீர்ப்புகளைச் செய்திருந்ததாகக் கண்டால், அவற்றை ஒப்புக் கொள்ளவும் திருத்தங்களை ஏற்படுத்தவும் [கூடாதபடி] அதிகம் மேட்டிமை யாயிராதீர்கள்.*

*நீங்கள் சிட்சிக்கப்படும்போது, நீங்கள் பாதிக்கப்படக்கூடிய விஷயங் கள் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். ஒரு புறத்தில், அவை குறித்து சலுகை எடுத்துக் கொள்வதைத் தவிர்த்து விடுங்கள். இதற்கு மறுபுறத்தில் திருப்பித் தாக்கும்படியான சோதனையை எதிர்த்து நில்லுங்கள்.*

*நம்மைப் பரிசோதித்தல் என்பது சிட்சித்தலின் ஒரு நோக்கமாக உள்ளது என்பதை நினைவில் வையுங்கள் - நாம் இந்த பரிசோதனையில் உயிர் பிழைத்து நின்றால், நாம் மேன்மையான மக்களாக இருக்க முடியும்.*

*தாவீதின் எண்ணப்போக்குதான் நமது மனதில் மிகவும் ஆழப்பதிகிற*

*விஷயமாக உள்ளது. தாவீதின் வார்த்தைகளை மீண்டும் ஒருமுறை கவனியுங்கள்: "... கர்த்தருடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால், ... என்னைத் திரும்பி வரப்பண்ணுவார். அவர்: 'உன்மேல் எனக்குப் பிரியமில்லை' என்பாராகில், இதோ இங்கே இருக்கிறேன்; அவர் தம்முடைய பார்வைக்கு நலமானபடி எனக்குச் செய்வாராக" (15:25, 26). தாவீது, "என்னை நான் தேவனுடைய கரங்களில் இடுகின்றேன். அவர் தாம் விரும்பியபடி எனக்குச் செய்யக் கூடும். நான் சரியானதைச் செய்வதற்கு அவரையே நம்பியிருக்கிறேன்" (சங். 30:4, 5).*

*"தேவனே, எங்கள் வாழ்வில் பிரச்சனைகள் பெருக்கெடுக்கும்போது, எங்களுக்கு உம் ஊழியக்காரரான தாவீதின் எண்ணப்போக்கைத் தாரும். நீர் எங்களை வெறுக்கிறீர் என்பதால் அல்ல, ஆனால் நீர் எங்களை நேசிக்கிறீர் என்பதாலேயே எங்களைச் சிட்சிக்கிறீர் என்பதை நாங்கள் உணர்ந்தறியச் செய்யும். பிதாவே, நீர் எங்களுக்குச் செய்ய முயற்சிப் பவற்றை நாங்கள் அடிக்கடி எதிர்த்து நிற்கிறோம். உமது சிட்சையை சாந்தமாய் ஏற்றுக் கொள்ள எங்களுக்கு உதவும். இயேசுவின் நாமத்திலே, ஆமென்."*

---

## பிரசங்க குறிப்புகள்

*அப்சலோமுடனான யுத்தத்தின்போது தாவீதை, அவரது மனிதர்கள் நகரத்திலேயே தங்கியிருக்கும்படி கேட்டுக் கொண்டதால், இது ஓய்வுபெறுதல் குறித்த பாடம் ஒன்றுக்கு நல்ல வேளையாக இருக்கும்: "கடிவாளத் தோல்களைப் பிறர் கையில் ஒப்படைத்தல்."*

*இந்தப் பாடத்தில் குறிப்பிட்டபடி, சங்கீதம் 3 மற்றும் 4 ஆகியவை தாவீது அப்சலோமுக்குத் தப்பி ஓடும்போது அவருடைய "காலை மற்றும் மாலை ஜெபங்களாக" இருந்தன. சங்கீதம் 41, அகித்தோப்பேல் தாவீதுக்கு எதிராகத் திரும்பியதைக் குறிப்பிடலாம்; விசேஷமாக வசனம் 9ஐக் கவனியுங்கள் (இது பிற்பாடு யோவா. 13:18ல் யூதாசுக்குப் பொருத்துவிக்கப் பட்டது). தாவீது யோர்தானைக் கடந்த பிற்பாடு சங்கீதம் 42 மற்றும் 43 ஆகியவை எழுதப்பட்டன என்றும், சங்கீதம் 61 மற்றும் 62 ஆகியவை மக்னாயீமில் [இருந்தபோது தாவீதால்] எழுதப்பட்டன என்றும் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது. சங்கீதம் 7, 20, 23, 27, 37, 38, 40 ஆகியவை இந்தக் காலகட்டத்தில் எழுதப்பட்டவைகளாக கருத்துத் தெரிவிக்கப்படும் சங்கீதங்களில் உள்ளடங்குகின்றன.*

குறிப்புகள்

[1]2 சாமுவேல் 15:18ல் உள்ள அறுநூறு பேர்கள், ஈத்தாயுடன் வந்திருந்தவர்களா அல்லது நாம் இதற்கு முன் தாவீதுடன் வனாந்தரத்தில் இருந்தவர்கள் என்று கண்டிருந்த அறுநூறு பேர்களா என்பதைப் பொறுத்தமட்டில் வேத வசனம் தெளிவற்று உள்ளது. இவர்கள் இந்தப் பிந்திய குழுவைச் சேர்ந்தவர்களாயிருந் திருப்பார்கள் என்பதே என் கருத்தாக உள்ளது. ஈத்தாயின் மனிதர்களின் பன்மைத் தன்மை பற்றிப் பல வசனங்கள் குறிப்பிடுவதாலும், பிற்பாடு அவரைத் தாவீது தமது படையின் மூன்றில் ஒரு பகுதிக்குத் தளபதியாக ஏற்படுத்தியிருந்ததாலும், ஈத்தாய் அநேகமாகத் தம்முடன் பல மனிதர்களைக் கொண்டிருந்து இருப்பார். [2]இது எருசலேமில் அவர்களின் வசிப்பிடங்களைக் குறிக்கின்றது. [3]NIV யில் "மக்கள் நகரத்தை விட்டு எல்லாரும் வெளியேறும் வரைக்கும் அபியத்தார் பலிசெலுத்திக் கொண்டிருந்தான்'' என்றுள்ளது (2 சாமு. 15:24). [4]தாவீது சாதோக்கை "ஞானதிருஷ்டிக்காரன்" என்று அழைத்தார் (2 சாமு. 15:27). இது அநேகமாக, ஊரிம் தும்மீம் கொண்ட ஏப்போத்தைப் பயன்படுத்தி கர்த்தரை விசாரிப்பதற்கு சாதோக் அழைக்கப்பட்டதைக் குறிப்பிடுவதா யிருக்கலாம். என்ன நடந்து கொண்டிருந்தது என்பதை அறியும் நிலையில் சாதோக் இருந்தார். [5]தாவீது "வனாந்தரத்தின் வெளிகளிலே தரித்திருப்பேன்" (2 சாமு. 15:28) என்று கூறினார். இது யோர்தானின் ஆழமற்ற பகுதிகளில் ஒன்றாக இருந்திருக்கலாம்; இது ஆசாரியர்களுக்குத் தெரிந்த இடமாயிருந்தது. [6]2 சாமுவேல் 15:32, "தாவீது மலையின் உச்சி மட்டும் வந்து, அங்கே தேவனைப் பணிந்து கொண்டபோது" என்று கூறுகின்றது. இது தாவீது தேவனைப் பணிந்து கொள்ள அங்கு நின்றார் என்றோ அல்லது அந்த உச்சியானது தேவன் தொழுது கொள்ளப்பட்ட "உயரமான இடங்களில்" ஒன்றாக இருந்தது என்றோ அர்த்தப் படலாம். தேவாலயம் கட்டப்பட்ட பின்பு, [இவ்விதமான] உயரமான இடங்கள் அகற்றப்பட வேண்டியவைகளாய் இருந்தன (ஆனால் ராஜாக்களில் பலர் இவற்றை அகற்றிப் போடாதிருந்தார்கள்). [7]அற்கியர்கள் என்பவர்கள் பெத்தேலுக்குத் தென்மேற்கில் இருந்த ஒரு சிற்றின மக்கள் குழுவினராவார்கள் (யோசு. 16:2). [8]2 சாமுவேல் 16:17ஐயும் காணவும். இது தாவீதுடன் ஊசாய்க்கு இருந்த உறவுமுறையின் எளிய விவரிப்பு என்பதற்கு மாறாக ஒரு பணிப்பொறுப்பின் பட்டப்பெயர் என்று பல கல்வியாளர்கள் நம்புகின்றார்கள் (1 இரா. 4:5ஐக் கவனிக்கவும்). தாவீதின் அரண்மனையில் ஊசாய் எவ்விதமான பதவியை வகித்திருந் தாலும், அது அவர் தாவீதுக்கு தனிப்பட்ட நண்பராயிருந்ததை எவ்விதத்திலும் தடை செய்யவில்லை. உண்மையில், ஊசாய் தாவீதுக்கு ஆற்றிய ஊழியத்திற்கு இவ்வித தனிப்பட்ட நட்புறவு அவசியமானதாக இருந்திருக்கலாம். [9]இது தாவீதின் வாழ்வில் அதிகம் பொய்யுரைத்தலை உள்ளடக்கியிருந்த இன்னொரு வரலாறுகளில் ஒன்றாக உள்ளது. வேதாகமம் ஒரு நிகழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது என்பதற்காக, அதைத் தேவன் அங்கீகரித்தார் என்று அர்த்த மாவதில்லை என்பதை நான் மீண்டும் உங்களுக்கு நினைவூட்டுகின்றேன். வேதாகமப் பாத்திரம் ஒருவர் செய்த எல்லாவற்றிற்கும், தாவீதும் அவரது நண்பர் களும் செய்த எல்லாவற்றிற்கும் கூட நாம் தற்காப்பு வாதம் செய்ய வேண்டிய தில்லை. [10]இவ்விடத்தில், இதை எழுதிய ஆங்கில எழுத்தாளர், தமது வசிப்பிடத்தில் (ஐட்சோனியாவில் 1950களில்) நேரிட்ட ஒரு புயலைப்பற்றி விவரித்துள்ளார். அதை நமது தமிழக மக்களுக்கு ஏற்புடைய வகையில் இதன் தமிழ் மொழிபெயர்ப்பாளர் மாற்றியமைத்துள்ளார்.

[11]மேவிபோசேத் தாவீதின் உணவு மேஜையில் உணவு உண்டு கொண்டிருந்த தால், தாவீது எருசலேமை விட்டுப் புறப்பட வேண்டும் என்று கட்டளையிட்ட போது, அவ்வார்த்தை இந்த இளைஞருக்கும் அனுப்பப்பட்டிருக்கும். [12]செய்திகள், உதாரணங்களால் நிறைந்துள்ளது, விசேஷமாக, முதியவர்கள் மற்றும்

*பலவீனர்களைப் பட்சித்தவர்கள் பற்றிய உதாரணங்களால் நிறைந்துள்ளது. வியாபார ரீதியிலான வஞ்சகர்கள் முதியவர்களின் உடைமைகளைப் பறித்து விடுகின்றார்கள். மதரீதியான மற்றும்/அல்லது அறநிலையை ரீதியிலான வஞ்சகக் கலைஞர்கள் விதவைகளைப் பற்றிப்பிடித்து, அவர்களின் உயில்களைத் தங்களுக்குச் சாதகமாக மாற்றிக் கொண்டு விடுகின்றார்கள். [13]ஒருவேளை சீமேயி, தாவீது ஆகீஸ் ராஜாவுக்குத் தமது உடன்பாட்டை வெளிப்படையாகக் கொடுத்திருந்தபடியால், சவுல் மற்றும் அவர் மகன் ஆகியோரின் மரணத்துக்குத் தாவீதுதாம் பொறுப்பாளி என்று நம்பியிருக்கலாம். அல்லது ஒருவேளை அவர், இஸ்பொசேத்தின் மரணத்திற்குத் தாவீதுதாம் பொறுப்பாளி என்று குற்றம் சாட்டியிருக்கலாம். அல்லது, 2 சாமுவேல் 21:1-14ன் நிகழ்ச்சிகள் முன்பே நடந்திருந்தால், ஒருவேளை சீமேயி அவற்றை சிந்தையில் கொண்டிருந் திருக்கலாம். [14]தாவீது தமது கூற்றுக்களுக்குப் பின்வருமாறு முன்னுரையளித்தார்: “செரூயாவின் குமாரரே, எனக்கும் உங்களுக்கும் என்ன?’’ (2 சாமு. 16:10). செரூயா தாவீதின் சகோதரியாயிருந்தாள், யோவாபும் அபிசாயியும் “செரூயாவின் குமாரர்களாய்” இருந்தார்கள். யோவாபும் தாவீதுடன் இருந்தார் (2 சாமு. 18:2). “எனக்கும் உங்களுக்கும் என்ன?” என்பது “நாம் விஷயங்களை ஒரே விதமாகக் காண்பதில்லை” என்று அர்த்தப்படுகின்றது. [15]2 சாமுவேல் 17:4ல் அப்சலோமின் சூழ்ச்சியின் வெற்றி காணப்படுகிறது, இது ‘‘இஸ்ரவேலின் மூப்பர்கள் யாவரும்’’ அவருடன் இருந்தார்கள் என்பதைச் சுட்டிக் காண்பிக்கின்றது. ‘‘இஸ்ரவேல்’’ என்பது வடக்கிலிருந்த பத்துக் கோத்திரங்களை மாத்திரம் குறிப்பதற்கு மாறாக எல்லா கோத்திரங்களையும் குறிப்பதாயிருக்கலாம். [16]“மனிதன் எதை விதைக்கின்றானோ” என்ற பாடத்தில் அகித்தோப்பேல் பற்றியும் இந்த நிகழ்ச்சி பற்றியும் உள்ள குறிப்புகளைக் காணவும். [17]அகித்தோப்பேல் தாவீதை “ராஜா” என்று குறிப்பிட்டார்; அரியணையில் யார் இருக்க வேண்டும் என்பதை அந்த முதிய ஆலோசனையாளர் அறிந்திருந்தார். [18]இது தேவனுடைய பிரமாணத்திற்கு எதிரானதாயிருந்தது (லேவி. 20:11; 1 கொரி. 5:1ஐயும் கவனிக்கவும்). [19]இதை 2 சாமுவேல் 17:14, அப்சலோமினிமித்தமாக “நல்ல யோசனை” என்று அழைக்கின்றது. [20]நாம் அறிந்த வரையில், அப்சலோம் இராணுவ விஷயங்களில் அனுபவமற்ற வராயிருந்தார். யுத்தத்தில், அப்சலோம் ஒரு தலைச் சீராவையோ அல்லது கவசத்தையோ அணிந்திருக்கவில்லை மற்றும் ஒருவேளை, அவரிடத்தில் கத்தியோ அல்லது பட்டயமோ இருந்ததில்லை. அப்சலோமுக்குத் தோல்வியைக் கொண்டு வரும்படி, அவரது வெறுமைத் தன்மைக்கு ஊசாய் வேண்டுகோள் விடுத்தார்.*

*[21]இது, வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு தற்கொலைகளில் ஒன்றாகும். அகித்தோப்பேல் தமது ஆலோசனையை அவர்கள் ஏற்றுக் கொள்ளாத போது, அப்சலோமின் நோக்கம் தோல்வியடைந்தால், தாவீது மீண்டும் வரும்போது தமக்கு என்ன செய்வாரோ என்று பயமடைந்தார். அவர் தம்மைத் தூக்கிலிட்டுக் கொண்டு இறந்தார் (KJV, NIV ஆகியவற்றைக் காணவும்). கர்த்தருக்குச் சித்தமானால், சவுல் பற்றி ன்நான் எழுதப்போகும்தி எதிர்காலப் பதிப்பொன்றில் தற்கொலை பற்றிய பாடக்கருத்து விரிவாய் ஆராயப்படும். [22]தாவீதுக்குத் தகவல் அளிப்பதற்கு விரிவான திட்டம் தீட்டப்பட்டது (2 சாமு. 15:34-36). இந்த இரண்டு மகன்களும் மதில்களுக்கு வெளிப்புறத்தில் தங்கியிருந் தார்கள், ஏனென்றால் அவர்கள் நகருக்குள் வருவதும் போவதுமாக இருந்தால் அது சந்தேகத்திற்கு இடமளிப்பதாயிருக்கும் (2 சாமு. 17:17). அவர்கள், மதில்களுக்கு வெளியில் இருந்த கீதரோன் சமவெளியில் இருந்த இன்றோகேல் என்ற ஊற்றினருகில் தங்கியிருந்தார்கள். ஊற்றுக்குத் தண்ணீர் எடுக்கச் செல்லும் பெண்ணொருத்தி மீது [சந்தேகத்திற்கிடமுண்டாக்கும் வகையில்] யார் கவனமும் படாது. [23]இது ஒரு*

*வசீகரமான வரலாறாக உள்ளது, மற்றும் இது, இரண்டு வேவுக் காரர்கள் இராகாப் என்பவளால் ஒளித்து வைக்கப்பட்ட வரலாற்றை நமக்கு நினைவூட்டுகிறது. [24]இந்த இடத்தில் நீங்கள் [பிரசங்கிப்பதை] நிறுத்தி, இளம் வயதினருக்காக எழுதப்பட்ட ''கர்த்தர்மேல் பாரத்தை வைத்து விடு'' என்ற பாடலில் கூட்டத்தாரை வழிநடத்தலாம். [25]இந்தத் தளபதிகளில் ஒருவராகக் கித்தியனான ஈத்தாய் என்பவரும் இருந்தார். அவர் தம்மைத் தாவீதுக்கு ஒப்புவித்த செயலுக்காக அவருக்கு வெகுமதியளிக்கப் பட்டது. [26]தாவீதின் படையில் நான்காயிரம் பேர் மாத்திரம் இருந்தார்கள் என்று யோசிப்பஸ் கூறுகின்றார், ஒருவேளை அப்படி இருந்திருக்கலாம். [27]2 சாமுவேல் 17:24-26, அப்சலோம் அமாசாவைத் தமது படையின் மீது [அதிகாரியாக] வைத்தார். அமாசா தாவீதின் சகோதரரின் மகனும், அப்சலோமின் ஒன்று விட்ட சகோதரருமாயிருந்தார். [28]சதுரங்க விளையாட்டில், ராஜாவைக் கைப்பற்றுதல் தான் எல்லாவற்றிலும் முக்கியமானதாக உள்ளது. நீங்கள் உங்கள் ராஜாவைக் காப்பாற்றி, எதிர்த்தரப்பின் ராஜாவைக் கைப்பற்றி விட்டால், அதில் மற்ற எந்தக் காய்களை இழந்தாலும் அது ஒரு பொருட்டல்ல. இங்கு அவ்விதமான சூழ்நிலைதான் நிலவிற்று. [29]ராஜாவைப் பாதுகாப்பதற்காகவும் உதவி தேவைப்பட்டால் விரைந்து செல்வதற்காகவும் படைவீரர்களின் ஒரு சிறு குழு நகரத்தில் தங்கியிருந்தது என்பது உறுதி. [30]தாவீதின் படையினர் அப்சலோம் படையினர் மீது அவர்கள் தயாராயிராத வேளையில் திடீர்த்தாக்குதல் நடத்தி அவர்களைக் காடுகளில் சிதறியோடும்படி செய்தார்கள் என்று யோசிப்பஸ் எழுதினார்.*

*[31]இந்த யுத்தம் யோர்தானுக்குக் கிழக்கில் உள்ள கீலேயாத்தில் நடந்தது என்பது ஆதாரப்பூர்வமானது என்றாலும், இது யோர்தானுக்கு மேற்கில் உள்ள ''எப்பிராயீமின் வனாந்தரம்'' என்று அழைக்கப்படுகின்றது (17:26). 42,000 எப்பிராயீமர்கள் இறந்துபோனதை (நியா. 12:1-6) நினைவுகூரும் வகையில் இந்தக் காடுகள் "எப்பிராயீமின் வனாந்தரம்" என்று அழைக்கப்பட்டது. [32]"பட்டயம் பட்சித்த ஜனங்களைப் பார்க்கிலும் காடு பட்சித்த ஜனம் அதிகம்" (2 சாமு. 18:8) என்ற வார்த்தைகள், போர்வீரர்கள் குழிகளில் விழுந்து இறந்து போனதை (2 சாமு. 18:17ஐக் கவனிக்கவும்)யும், காட்டு மிருகங்களால் தின்னப்பட்டு இறந்துபோனதையும் குறிப்பிட்டிருக்கவும் வாய்ப்பு உண்டு. [33]இவர்கள் அப்சலோமின் மனிதர்களில் இருபதினாயிரம் பேர்களா அல்லது ஒட்டுமொத்தமாக இருபதினாயிரம் பேர்களா என்பது வேத வசனப் பகுதியில் தெளிவாகக் கூறப்படவில்லை. இவற்றில் முந்தியதையே நான் யூகிக்கின்றேன். [34]கூஷ் என்பது எகிப்தின் தென்பகுதியில் நைல்நதியின் மேல்புறம் இருந்த பகுதியாகும். இப்போது இது எத்தியோப்பியா, சூடான் என்று அறியப்படுகின்றது. [35]யோவாப் தாம் அப்சலோமைக் கொன்றார் என்பதைத் தாவீது [இந்த வேளையில்] அறிந்திருந்தாரா இல்லையா என்பது தெளிவாகத் தெரியவில்லை (1 இரா. 2:5ஐக் காணவும்). தாவீதிடத்தில் யோவாப் உரைத்த வார்த்தைகளில் இருந்த துடுக்குத்தனம், தாவீது அதை அறிந்தார் என்று யோவாப் நினைக்கவில்லை என்று நம்பும்படி என்னை வழிநடத்துகின்றது. [36]இதைச் செய்வதற்கான யோவாபின் நோக்கங்கள் அநேகமாக ஒரு கலவையாக இருக்கலாம். தாவீதைப்பற்றி அக்கறை உள்ளவராயிருப்பதுடன் கூடுதலாக அவர், அநேகமாக நாட்டைப் பற்றியும் அதிகாரத்தில் தமது சொந்த நிலைபற்றியும் அக்கறை கொண்டிருந்திருக்கலாம். எவ்வகையிலும், அவரது இந்த வார்த்தைகளே தாவீதுக்கு [அந்த வேளையில்] தேவைப்பட்டன. [37]தாவீது மக்களிடத்தில் "அன்பாய்" பேச வேண்டும் என்று அவருக்கு யோவாப் அறைகூவல் விடுத்திருந்தார் (2 சாமு. 19:7). நேரடியான அர்த்தத்தில், யோவாப் அவரிடம் மக்களின் "இருதயத்தில் பேசும்படி" - அதாவது, அவர்களின் இருதயங் களின்*

*தேவைகளுக்கேற்ற வகையில் பேசும்படி - கூறியிருந்தார். L. B. பொழிப்புரை யில், யோவாப், "அங்கே வெளியில் சென்று துருப்புக்களைப் பாராட்டும்" என்று கூறினார் என்றுள்ளது. [38]இது தாவீது தமது சரீரத்தில் இருந்த முள்ளை எடுத்துப் போடுவதற்காகச் செய்த இன்னொரு முயற்சியாக இருந்தது. யோவாப் தாவீதை எதிர்கொண்டிருந்த இராஜ தந்திரமற்ற முறை பற்றித் தாவீது மகிழ்வற்று இருந்தாரா? ஒருவேளை அப்படி இருந்திருக்கலாம் (ஆகிலும் தாவீது இதை யோவாபின் தவறான செயல்களில் ஒன்று என்பதாகப் பின்பு குறிப்பிடாதிருந்தார், 1 இரா. 2:5). [39]பர்சிலாய் பற்றிய வரலாறு வேதவசனப் பகுதியில் பிற்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது, ஆனால் அது தாவீது யோர்தானைக் கடப்பதற்கு முன்பாக நடைபெற்றது (2 சாமு. 19:33, 39). நிகழ்ச்சிகளை நாள்வரிசை அட்டவணை முறைப்படி இடுதல் என்ற என் முயற்சியில் இதை நான் இவ்விடத்தில் வைக்கின்றேன். [40]யோசிப்பஸ் என்பவரின் எழுத்தாக்கங்கள், மற்றும் செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பின் சில கைப்பிரதிகள் ஆகியவை, கிம்காம் என்பவர் பர்சிலாயின் மகன் என்று கூறுகின்றன. இதை 1 இரா. 2:7 வசனமும் ஆதரிக்கின்றது.*

*[41]அவர்கள் படகின் மூலம் இக்கரைப்படுத்தப்பட்டார்கள் என்று எருசலேம் வேதாகமம் கூறுகின்றது. [42]அந்த வார்த்தைகளைப் பேசியவர்களாக வேதாகமத்தில் வருகின்ற ஒரு சிலரில் சீமேயியும் இருக்கின்றார். அவர் தமது செயல்களின் விளைவுகளைத் தவிர்ப்பதற்காகவே அந்த வார்த்தைகளைப் பேசினார் என்பது உறுதி. [43]அவர் "யோசேப்பின் வீட்டார்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார் (2 சாமு. 19:20). யோசேப்பின் கர்ப்பப் பிறப்பான எப்பிராயீம், மனாசே ஆகிய இருவரின் கோத்திரத்தார், வடக்குக் கோத்திரங்களில் மிகவும் வல்லமையும் செல்வாக்கும் பெற்று விளங்கினார்கள். ஆகையால், "யோசேப்பின் வீட்டார்" என்பது வடக்குக் கோத்திரங்கள் எல்லாரையும் குறிப்பதற்குப் பயன்படுத்தப் பட்டது. [44]இவரைத் தாவீது ஒருக்காலும் நம்பவில்லை, தாவீது தமது மரணப் படுக்கையில், சாலொமோனுக்கு அறிவுறுத்தல்கள் கொடுத்தார், அதன் விளைவாகக் கடைசியில் சீமேயி கொல்லப்பட்டார் (1 இரா. 2). [45]தாவீது, எது சரியானது எது தவறானது என்று முடிவெடுப்பதில் "தேவதூதனைப் போலிருந்தார்." தெக்கோவா ஊரிலிருந்து வந்திருந்த பெண் (2 சாமு. 14:17), தாவீதுடன் பேசும்போது, இதே சொற்றொடரைப் பயன் படுத்தினாள். [46]இரண்டு மகன்கள் கூறும் மாறுபடுகின்ற கதைகளைக் கேட்கும் தாயின் நிலையில் தாவீது இருந்தார். அவர்களில் ஒருவன் பொய்யுரைக்கிறான் என்பதை அவள் அறிந்திருக்கலாம், ஆனால் அதற்கான ஆதாரம் குறைவாயிருப்பதால், அவள் பெரும்பாலும் அவ்விருவரையும் ஒரே விதமாகவே கையாளுகின்றாள்.*